# தினபூமி

thinaboomi.com

வேலூர், புதன், டிசம்பர் 07, 2022 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00





யாழ்ப்பாணம்-சென்னை விமான சேவை மீண்டும் தொடங்குகிறது: இலங்கை அமைச்சர் தகவல்

...2-ம் பக்கம்

நாட்டிலேயே முதல் முறை: ஐதராபாத்தில் ஏ.டி.எம். மூலம் தங்கம் வாங்கலாம்

...3-ம் பக்கம்

இன்று 2-வது ஒருநாள் போட்டி: வங்காளதேச அணிக்கு எதிராக வெற்றி நெருக்கடியில் இந்தியா

...7-ம் பக்கம்





● உலகப்பிரசித்தி பெற்ற திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை மகா தீபத்திருவிழாவை முன்னிட்டு நேற்று மகாதீபம் ஏற்றப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

### 2 மாநில தேர்தல் முடிவுகள் நாளை வெளியாகும் நிலையில்

# பாராளுமன்ற குளிர்கால கூட்டம் இன்று ஆரம்பம்

## எதிர்க்கட்சிகளுக்கு கூடுதல் நேரம் ஒதுக்க கோரிக்கை

புதுடெல்லி, டிச. 07-

**2 மாநில தேர்தல் முடிவுகள் நாளை (டிச.8-ம் தேதி) வெளியாகவுள்ள நிலையில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. வரும் 29ம் தேதி வரை நடைபெற திட்டமிடப்பட்டுள்ள இந்த கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகளுக்கு கூடுதல் நேரம் ஒதுக்க வேண்டும் என்று நேற்று நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.**

**தாமதமாக துவக்கம்...**

பாராளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர், வழக்கமாக நவம்பர் மாதம் தொடங்கும். இந்த ஆண்டு சற்று தாமதமாக டிசம்பர் மாதம் தொடங்குகிறது.

இன்று (புதன்கிழமை) குளிர்கால கூட்டத்தொடர் தொடங்குகிறது. டிசம்பர் 29-ம் தேதி வரை இத்தொடர் நடக்கிறது. மொத்தம் 17 அமர்வுகள் நடைபெறும்.

இந்த தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ள 16 மசோதாக்களை மத்திய அரசு பட்டியலிட்டுள்ளது.

**அனைத்துக்கட்சி கூட்டம்**

இதற்கிடையே, கூட்டத்தொடர் குறித்து விவாதிக்க மத்திய அரசு நேற்று (செவ்வாய்க்கிழமை) அனைத்து கட்சி கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.

இரு அவைகளின் அரசியல் கட்சி குழு தலைவர்களுக்கு பாராளுமன்ற விவகார அமைச்சர் பிரகலாத் ஜோஷி அழைப்பு விடுத்திருந்தார்.

**எதிர்க்கட்சி தலைவர்கள்**

பாராளுமன்றத்தின் வளாகத்தில் மத்திய ராணுவ அமைச்சர் மற்றும் மக்களவையின் துணை தலைவரான ராஜ்நாத் சிங் தலைமையில் இந்த கூட்டம் நேற்று கூடியது.

இந்த கூட்டத்தில், அரசு சார்பில் பாராளுமன்ற விவகார அமைச்சர் பிரகலாத் ஜோஷி, பாராளுமன்ற இணை அமைச்சர் முரளீதரன் மற்றும் அர்ஜூன் ராம் மேக்வால் மற்றும் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காங்கிரஸ் சார்பில் முக்கிய எதிர்க்கட்சி தலைவரான ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் சுதீப் பந்தோபாத்யாய், தெரீக் ஓ பிரையன், தி.மு.க.வின் திருச்சி சிவா மற்றும் டி.ஆர்.பாலு உள்ளிட்ட பல்வேறு முக்கிய எதிர்க்கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**பல்வேறு விவகாரங்கள்**

திரிணாமுல் காங்கிரஸ், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியினருக்கு கூடுதல் நேரம் அளிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சி தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர். மேலும் எதிர்க்கட்சிகளின் குரல் ஒடுக்கப்படக்கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

**விவாதிக்க கோரிக்கை**

இதுதவிர, பெட்ரோல், டீசல் விலை உயர்வு, மகளிர் இடஒதுக்கீடு மசோதா, மக்கள் தொகையை கட்டுப்படுத்தும் மசோதாவை கொண்டு வரவேண்டும், போதை பொருள் வினியோகம் மற்றும் நுகர்வு அதிகரிப்பு பற்றிய விவாதம், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்குவது உள்ளிட்ட விவகாரங்களை பற்றி கூட்டத்தொடரில் விவாதிக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டன.

இதனை தொடர்ந்து, பாராளுமன்ற விவகார அமைச்சர் பிரகலாத் ஜோஷி கூறும்போது, விதிகள் மற்றும் அவை தலைவரின் அறிவுறுத்தலின்பேரில், அனைத்து விவகாரங்களை பற்றியும் ஆலோசனை நடத்தவும் மற்றும் விவாதம் மேற்கொள்ளவும் அரசு தயாராக உள்ளது என்று உறுதி அளித்தார்.

# தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கு நாளை கடைசி நாள்

சென்னை, டிச. 07-

**தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள நாளை (8-ம் தேதி) கடைசி நாளாகும். தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் ஜனவரி 5-ம் தேதி வெளியிடப்படுகிறது.**

தமிழகம் உள்பட நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கான பணிகள் கடந்த மாதம் 9-ந் தேதி தொடங்கியது. தமிழகம் முழுவதும் அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் செய்தல், நீக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வருகிற 8-ம் தேதி வரை காலஅவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த பணிகளுக்காக கடந்த மாதம் 12, 13, 26, 27 ஆகிய தேதிகளில் வாக்கு சாவடி அமைக்கும் இடங்களில் சிறப்பு முகாம்கள் நடந்தன. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு, நீக்கம் போன்ற பணிகளுக்காக மட்டும் கடந்த 1-ந்தேதி வரை 18 லட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் செய்வதற்கு வருகிற 8-ந்தேதி கடைசி நாள் என்பதால் இன்னும் 2 நாட்கள் மட்டுமே கால அவகாசம் உள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் வருகிற 26-ந்தேதிக்குள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. விண்ணப்பங்களை பரிசீலித்து இறுதி வாக்காளர் பட்டியல் தயாரிக்க வருகிற ஜனவரி 3-ந் தேதி வரை தேர்தல் அலுவலர்களுக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டு உள்ளது. இதையடுத்து தமிழகம் முழுவதும் இறுதி வாக்காளர் பட்டியல் ஜனவரி 5-ந்தேதி வெளியிடப்படுகிறது. வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்கவும், நீக்கவும், திருத்தம் செய்யவும் சென்னையில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், மாவட்டங்களில் உள்ள தேர்தல் பிரிவு அலுவலகங்களில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் வருகிற 8-ந்தேதியுடன் நிறைவு பெறும். ஆனாலும் வாக்காளர்கள் தேர்தல் ஆணையத்தின் இணையதளமான www.nvsp.in மூலம் வாக்காளர் பட்டியலில் தொடர்ந்து திருத்தங்களை செய்யலாம். அவை இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு பரிசீலணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தேர்தல் கமிஷன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சி எதிரொலி:

# பெட்ரோல், டீசல் விலை ரூ.5 வரை குறைய வாய்ப்பு

புதுடெல்லி, டிச. 07-

**கச்சா எண்ணெய்யின் விலை சர்வதேச சந்தையில் குறைந்து வருவதால் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 5 ரூபாய் வரை குறைக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

எரிபொருளை 85 சதவீதம் அளவுக்கு வெளி நாடுகளில் இருந்து இந்தியா இறக்குமதி செய்வதால் சர்வதேச எண்ணெய் சந்தையில் ஏற்படும் விலை மாற்றம் வெகு விரைவாக இந்தியாவில் எதிரொலிக்கும். பெருமளவு எண்ணெய் ஈராக், அரேபியா, ரஷ்யாவிடம் இருந்து இந்தியா வாங்குகிறது. உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதல் காரணமாக சர்வதேச எண்ணெய் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளது. பீப்பாய் ஒன்றின் விலை 120 டாலரில் இருந்து 90 டாலராக குறைந்தது.

ஒரு வாரமாக 90 டாலருகே விற்பனை செய்யப்படும் சூழலில் இந்த விலையில் மேலும் வீழ்ச்சி ஏற்படலாம் என்று தெரிகிறது. இதனால் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 5 ரூபாய் வரை குறைக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கான முடிவு ஒரு வாரத்திற்குள் எடுக்கப்படலாம் எனவும் தெரிகிறது. கடந்த முறை கலால் வரி குறைக்கப்பட்டதன் மூலம் பெட்ரோல் விலை லிட்டருக்கு 8 ரூபாயும், டீசல் விலை லிட்டருக்கு 6 ரூபாயும் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் 14 பேர் சென்னை வந்தனர்

ஆலந்தூர், டிச. 07-

**இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 14 மீனவர்கள் நேற்று காலை விமான மூலம் சென்னை வந்தனர். அவர்களை மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்றனர்.**

கடந்த நவம்பர் 14ஆம் தேதி நாகபட்டினம், புதுக்கோட்டை, காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 14 மீனவர்கள் காரைக்கால் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டு இருந்தனர். அப்போது அவர்களின் இயந்திர படகு திடீரென பழுதடைந்து கடலில் நின்றுவிட்டது. மீனவர்கள் இயந்திரப் படகை பழுது பார்த்துக்கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் இலங்கை கடற்படையினர் வந்து, தமிழக மீனவர்களை சுற்றி வளைத்து, அவர்கள் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக 14 மீனவர்களையும் கைது செய்து, படகுகளையும் பறிமுதல் செய்தனர். இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார். இலங்கை சிறையில் இருந்து 14 மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டு நேற்று அதிகாலை இலங்கையிலிருந்து, ஏர் இந்தியா பயணிகள் விமானம் மூலம் சென்னை வந்தனர்.

சென்னை விமான நிலையத்தில் மீனவர்களை, தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரிகள், தமிழக அரசின் சார்பில் வரவேற்றனர். அதோடு தமிழக அரசு ஏற்பாடு செய்திருந்த வாகனங்களில் மீனவர்களை அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த 14 மீனவர்களில், 10 மீனவர்கள் காரைக்கால் பகுதியையும், 3 மீனவர்கள் புதுக்கோட்டை பகுதியையும், ஒரு மீனவர் நாகைப்பட்டினம் பகுதியையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### காற்றழுத்த தாழ்வு பகுதி புயலாக வலுப்பெறுகிறது:

# 15 மாவட்டங்களுக்கு 9-ம் தேதி ரெட் அலர்ட்

சென்னை, டிச. 07-

**மேற்கு - வடமேற்கு திசையில் நகரும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று (டிச.7) மாலை புயலாக வலுவடையக் கூடும் என்பதால், தமிழகத்தில் 9-ம் தேதி அதி கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. அன்றைய தினம் 15 மாவட்டங்களுக்கு 'ரெட் அலர்ட்' விடுக்கப்பட்டுள்ளது. மேலும் அடுத்த 3 நாட்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இது தொடாபாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவல்: டிச.5-ம் தேதி தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று காலை (நவ.6) தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலைகொண்டுள்ளது.

இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று (டிச.6) மாலை தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்தது.

பிறகு, மேலும் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று (7ம் தேதி) மாலை புயலாக வலுவடையக்கூடும். இது மேலும் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து 08-09-ம் தேதிகளில் வட தமிழகம்-புதுவை, மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளை ஒட்டி நிலவக் கூடும்.

இதன் காரணமாக 6ம் தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 7-ம் தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

8ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக் கூடும். இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், சென்னை, இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும்; ஓரிரு இடங்களில் அதி கனமழை (ரெட் அலர்ட்) பெய்ய வாய்ப்புள்ளது. வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

10ம் தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு, சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்தில் 6ம் தேதி வீசக்கூடும். தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்தில் 6ம் தேதியன்று வீசக்கூடும். காற்றின் வேகம் படிப்படியாக உயர்ந்து 7ம் தேதியன்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். பிறகு காற்றின் வேகம் படிப்படியாக குறைந்து 8ம் தேதியன்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.


தமிழக- புதுவை மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகள், வட இலங்கை கடலோரப்பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்தில் 8ம் தேதி காலை தொடங்கி காற்றின் வேகம் படிப்படியாக உயர்ந்து 8ம் தேதி மாலை முதல் 9ம் தேதி மாலை வரை மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்திலும், 9ம் தேதி மாலை முதல் 10ம் தேதி காலை வரை மணிக்கு 70 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்தில் வேகத்தில் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். பிறகு காற்றின் வேகம் படிப்படியாக குறைந்து 10ம் தேதி மாலை மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -208.24 | -58.30 |
| பாயிண்ட் 62626.36 | பாயிண்ட் 18642.75 |



**தங்கம்**
1 சவரன் ₹40,080
1 கிராம் ₹5,010



**வெள்ளி**
1 கிலோ ₹70,800
1 கிராம் ₹70.80

**டாலர்** ₹82.39

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# யாழ்ப்பாணம்-சென்னை விமான சேவை மீண்டும் தொடங்குகிறது

## இலங்கை அமைச்சர் தகவல்

**கொழும்பு, டிச. 07-**



இலங்கையின் வடக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கு மீண்டும் விமானங்களை இயக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சி பெறுவதுடன், நலிவடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் உதவியாக இருக்கும்.

இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் முக்கிய ஆதாரமாக சுற்றுலாத்துறை விளங்குகிறது. எனினும், 2020-ம் ஆண்டில் கொரோனா தொற்று பரவி, சுற்றுலாத் துறையை கடுமையாக முடக்கியது. அத்துடன், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று.

தற்போது யாழ்ப்பாணத்தின் பலாலியில் இருந்து இந்தியாவுக்கான விமானங்கள் விரைவில் இயக்கப்படும். அநேகமாக வரும் 12-ம் தேதிக்குள் விமான சேவை தொடங்கப்படும் என விமான போக்குவரத்து துறை அமைச்சர் நிமல் சிறிபாலா டி சில்வா தெரிவித்தார். ஓடுபாதையை விரிவாக்கம் செய்யும் பணிகள் செய்யவேண்டியிருப்பதாகவும், தற்போதுள்ள ஓடுபாதையில் 75 இருக்கை கொண்ட விமானங்களை மட்டுமே கையாள முடியும் என்றும் அவர் கூறினார்.

இந்த விமான நிலையம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் என 2019-ல் பெயர் சூட்டப்பட்டது. முதல் சர்வதேச விமானம் சென்னையில் இருந்து வந்து தரையிறங்கியது. 2019-ல் இந்தியா மற்றும் இலங்கை இணைந்து இந்த விமான நிலையத்தை மறுசீரமைப்பு செய்தது. முன்னதாக, இந்தியாவின் அலையன்ஸ் நிறுவனம், சென்னையில் இருந்து பலாலிக்கு வாரந்தோறும் மூன்று விமானங்களை இயக்கியது. 2019 நவம்பரில் இலங்கையின் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர், விமான நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### பறவை காய்ச்சல் பதற்றம்:

# 3 லட்சம் கோழிகளை அழிக்கும் ஜப்பான்

**டோக்கியோ, டிச. 07-**

ஜப்பானில் பறவை காய்ச்சல் பரவுவதை தடுக்கும் விதமாக 3 லட்சம் கோழிகளை அழிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜப்பானின் ஆய்ச்சி மாகாணத்தில் உள்ள ஒரு கோழிப்பண்ணையில் வழக்கத்துக்கு மாறாக அதிக எண்ணிக்கையில் கோழிகள் இறந்தன. இதை தொடர்ந்து இறந்துபோன கோழிகளை பரிசோதித்ததில் அவற்றில் பெரும்பாலானவை பறவை காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்தது தெரியவந்தது. இது அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆய்ச்சி மாகாணத்தில் 11 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது பறவை காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பறவை காய்ச்சல் மேலும் பரவுவதை தடுக்கும் விதமாக மாகாணம் முழுவதிலும் சுமார் 3 லட்சத்து 10 ஆயிரம் கோழிகளை அழிக்க அதிகாரிகள் முடிவு செய்து அதற்கான பணிகளை தொடங்கியுள்ளனர்.

இதே போல் கோஹிமா மாகாணத்திலும் பறவை காய்ச்சல் காரணமாக 34 ஆயிரம் கோழிகள் அழிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஜப்பானில் கடந்த அக்டோபர் மாத இறுதியில் இருந்து பறவை காய்ச்சல் பரவி வருவதும் இதுவரை 33 லட்சம் கோழிகள் அழிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### விளையாட்டு போட்டியில்

# ஹிஜாப் இல்லாமல் பங்கேற்ற வீராங்கனையின் வீடு தகர்ப்பு

**டெக்ரான், டிச. 07-**

தென் கொரியாவில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் ஹிஜாப் அணியாமல் பங்கேற்ற ஈரான் வீராங்கனையின் வீடு தகர்க்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

ஈரான் நாட்டில் பெண்களுக்கான ஆடைக் கட்டுப்பாடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உலகளவில் ஈரானிய பெண்கள் எங்கு சென்றாலும் அவர்கள் நாட்டின் கட்டாய ஆடைக் கட்டுப்பாட்டு விதிகளை பின்பற்றி ஆடை அணிய வேண்டும். ஈரானிய விளையாட்டு வீராங்கனைகள் தங்கள் தலைமுடியை மறைத்தவாறு, தலையில் முக்காடு அணிந்து தான் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இந்த நிலையில், தென் கொரியாவில் சர்வதேச மலை ஏறும் போட்டி சமீபத்தில் நடந்தது. இப்போட்டியில் ஈரானிய மலையேற்ற வீராங்கனை எல்னாஸ் ரெகாபி(33), ஹிஜாப் இல்லாமல் பங்கேற்றார். சர்வதேச போட்டியில் ஈரானின் கட்டாய ஆடைக் கட்டுப்பாட்டை அவர் மீறினார் என்று கூறப்படுகிறது.

எனது முக்காடு கவனமின்றி கீழே விழுந்து விட்டது'' என்று அவர் விளக்கம் அளித்தார். இதனையடுத்து அவர் கட்டாயமாக மன்னிப்பு கேட்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். இந்நிலையில், ஹிஜாப் அணியாமல் போட்டியிட்ட ஈரானிய தடகள வீராங்கனையின் வீடு போலீஸ் அதிகாரிகளால் இடிக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. .

உரிய அனுமதி இல்லாததன் காரணமாக அவருடைய குடும்பவீடு இடிக்கப்பட்டது என்றும், இதற்கும் ஹிஜாப் சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை, இது பல மாதங்கள் முன்பு நடந்தது என்று உள்ளூர் ஊடகங்கள் கூறுகின்றன. இதனிடையே, வீராங்கனை எல்னாஸ் ரெகாபி மற்றும் அவரது சகோதரரும் சிறந்த தடகள வீரருமான தாவூத் ஆகியோர் கண் கலங்கி அழும் வீடியோ வைரலாகி வருகிறது.

### நிலவு பயணத்தை முடித்துக் கொண்டு

# பூமிக்கு புறப்பட்டது ஓரியன் விண்கலம்

**நியூயார்க், டிச. 07-**

நிலவின் மேலே ஆய்வை முடித்துக் கொண்டு ஓரியன் விண்கலம் பூமிக்கு புறப்பட்டுள்ளது.

நிலவுக்கு மீண்டும் மனிதனை அனுப்ப அமெரிக்க விண்வெளி கழகமான நாசா திட்டமிட்டுள்ளது. இதற்காக ஆர்டெமிஸ் என்ற திட்டத்தை வடிவமைத்துள்ளது. இதில் சோதனை முயற்சியாக ராக்கெட் மூலம் ஓரியன் விண்கலம் கடந்த மாதம் 16-ம் தேதி விண்ணில் ஏவப்பட்டது.

ஓரியன் விண்கலம் நிலவின் சுற்று வட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டு சுற்றியது. இந்த நிலையில் நிலவின் மேலே ஆய்வை முடித்துக் கொண்டு ஓரியன் விண்கலம் பூமிக்கு புறப்பட்டுள்ளது.

வருகிற 11-ம் தேதி உள்ளூர் நேரப்படி காலை 9.40 மணிக்கு ஓரியன் விண்கலத்தை சான்டியாகோவில் பசிபிக் பெருங்கடலில் இறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அங்கிருந்து விண்கலம், அமெரிக்க கடற்படை கப்பலில் ஏற்றப்படும். ஓரியன் விண்கலம் பூமிக்கு திரும்பிய பிறகு அதன் தரவுகள் ஆய்வு செய்யப்பட்டு ஆர்டெமிஸ்-2 திட்டம் தொடங்கப்படும்.

### உலகின் மிக பெரிய தொலைநோக்கியை அமைக்கும் பணி ஆஸி.யில் தொடக்கம்

**சிட்னி, டிச. 07-**

ஆஸ்திரேலியாவில் உலகின் மிகப்பெரிய தொலைநோக்கியை அமைக்கும் கட்டுமானப் பணி தொடங்கியுள்ளது. கிறிஸ்துமஸ் மரம் போன்று ஒரு லட்சத்து 31 ஆயிரம் ஆண்டனாக்கள் தொகுப்பாக இணைக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியாவின் சர்வதேச தளங்கள் இணைந்து 16 நாடுகளின் ஒத்துழைப்போடு இந்த பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் அடுத்த 50 ஆண்டுகளில் விண்வெளியில் இருந்து புதிய கண்டுபிடிப்பு தகவல்களை வெளியுலகிற்கு கொண்டு வர முடியும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# அம்பேத்கர் நினைவு நாள்: முதல்வர் மு.க. ஸ்டாலின் டுவிட்டர் பதிவு

**சென்னை, டிச. 07-**

ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம் எனச் சூளுரைத்து உறுதியெடுப்போம் என்று அம்பேத்கர் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை விலங்கை ஒடிக்க புரட்சி செய்த புத்துலக புத்தர், சமத்துவத்தை நோக்கிய போராட்டப் பயணத்தில் வடக்கு கண்ட பெரியார், புரட்சியாளர் பாபாசாகேப் அம்பேத்கரின் நினைவு நாளில் ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம் எனச் சூளுரைத்து உறுதியெடுப்போம்.

இவ்வாறு அவர் அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. பொதுக்குழு வழக்கு விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு

**சென்னை, டிச. 07-**

அ.தி.மு.க. பொதுக்குழு தொடர்பான வழக்கின் விசாரணையை டிசம்பர் 12-ம் தேதிக்கு ஒத்திவைத்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தை எதிர்த்து ஓ.பன்னீர் செல்வம் தொடர்ந்த வழக்கில், 'கடந்த ஜூலை 11-இல் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம் செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெயச்சந்திரன் கடந்த ஆகஸ்ட் 17-ஆம் தேதி தீர்ப்பளித்தார்.

தனி நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கில், தனிநீதிபதி ஜெயச்சந்திரன் அளித்த தீர்ப்பை ரத்து செய்து, கடந்த ஜூலை 11ம் தேதி நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் செல்லும் என்று நீதிபதிகள் எம்.துரைசாமி, சுந்தர் மோகன் அமர்வு தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் மேல்முறையீடு செய்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணையில் இருந்து வருகிறது. நேற்றைய விசாரணையில், பொதுக்குழு செல்லும் என நீதிமன்றம் உத்தரவிட இபிஎஸ் தரப்பு கோரியது.

மேலும் 'வழக்கை விரைந்து விசாரித்து முடிக்க வேண்டும், தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டால் கட்சி செயல்பட முடியாத நிலையில் உள்ளது. எனவே, இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும்' என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், ஓபிஎஸ் தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஆஜராகததால் வழக்கை ஒத்திவைக்க கோரினர். இதையடுத்து வழக்கு டிசம்பர் 12-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### அமைச்சர் செந்தில் பாலாஜி குறித்து அவதூறு கருத்து:

# பாஜக நிர்வாகிக்கு தடையை நீட்டித்து ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, டிச. 07-**

அமைச்சர் செந்தில்பாலாஜி குறித்து கருத்துகளை வெளியிட தமிழக பாஜக ஐ.டி. பிரிவு தலைவர் நிர்மல்குமாருக்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீட்டித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், தமிழக மின் துறை, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் செந்தில்பாலாஜி தாக்கல் செய்த மனுவில், ''தமிழகத்தில் டாஸ்மாக் விற்பனை மற்றும் மதுபான கொள்முதல் தொடர்பாக தன்னைப் பற்றி ஆதாரமற்ற கருத்துகளை தமிழக பாஜக ஐ.டி. பிரிவு தலைவர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் பரப்பி வருகிறார். எனவே அதுபோன்ற கருத்துகளை அவர் பேச தடை விதிக்க வேண்டும்'' என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அமைச்சர் செந்தில்பாலாஜி குறித்து அவதூறாக பேச நிர்மல்குமாருக்கு தடை விதித்து உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கில் நிர்மல் குமார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், ''செந்தில்பாலாஜி முறைகேடு செய்ததற்கான போதிய ஆதாரங்கள் உள்ளன. தனது முறைகேடுகளை மறைப்பதற்காகவே எனக்கு எதிரான இந்த வழக்கை அவர் தாக்கல் செய்துள்ளதார்'' என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, நிர்மல்குமார் தாக்கல் செய்துள்ள பதில் மனுவுக்கு செந்தில் பாலாஜி தரப்பில் விளக்கம் அளிக்க உத்தரவிட்டார்.

மேலும் செந்தில்பாலாஜி வழக்கு குறித்து டுவிட்டர் மற்றும் யூடியூப் ஆகியவை பதிலளிக்க உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை டிசம்பர் 13-ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.அதுவரை செந்தில்பாலாஜி குறித்து அவதூறு கருத்துகளை நிர்மல் குமாருக்கு விதிக்கபட்ட இடைக்கால தடையை நீட்டித்தும் உத்தரவிட்டார்.

### அரசு ஊழியர்களை குறிவைத்து

# ஆப்கனில் நடந்த வெடிகுண்டு தாக்குதலில் 6 பேர் உயிரிழப்பு

**காபூல், டிச. 07-**

ஆப்கானிஸ்தானில் நேற்று காலையில் அரசு ஊழியர்களை குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பால்க் மாகாணத்தின் மசார்-இ ஷரிப் நகரில் சாலையோரம் இருந்த வண்டிக்குள் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது. ஹியரடன் எரிவாயு மற்றும் பெட்ரோலியத் துறை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து அப்பகுதியை கடந்த போது, வெடிகுண்டு வெடித்தது. இதில் பேருந்து கடுமையாக சேதமடைந்தது.

மேலும் அருகில் உள்ள வாகனம் மற்றும் அங்கிருந்த கடைகளும் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்தன. இந்த தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். 7 பேர் பலத்த காயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் ஐ.எஸ். அமைப்பின் துணை அமைப்பான கொராசன் மகாண ஐ.எஸ். அமைப்பு இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

தலிபான்களின் போட்டி அமைப்பான இந்த ஐ.எஸ். அமைப்பானது, ஆப்கானிஸ்தானில் 2021-ல் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

### 10 மாவட்டங்களுக்கு விரைந்தது தேசிய பேரிடர் மீட்புப் படை:

# புயல் - கனமழையை எதிர்கொள்ள தயார்

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் அறிவிப்பு

**சென்னை, டிச. 07-**

தமிழகத்தில் புயல், கன மழை எச்சரிக்கை காரணமாக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளைக் கண்காணிக்க பல்துறை மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

புயல் மற்றும் கனமழையை எதிர்கொள்ள அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் 29.10.2022 முதல் வடகிழக்குப் பருவமழை தொடங்கியதிலிருந்து பரவலாக பல்வேறு மாவட்டங்களில் மழைப் பெய்து வருகிறது. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் 5-ம் தேதி அறிவிக்கையில், தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதன் அருகில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது என்றும், இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து 6-ம் தேதியன்று மாலை தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக்கூடும் என்றும், பிறகு இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து புயலாக வலுவடைந்து 8-ம் தேதியன்று காலை வடதமிழக கடலோரப் பகுதியின் அருகில் வந்தடையக் கூடும் என்று தெரிவித்துள்ளது. இதன் காரணமாக முதல்வர் அறிவுரையின் பேரில் கனமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கனமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு கடற்கரைப் பகுதியில் உள்ள 93 மீன்பிடி படகுகளில் உள்ள மீனவர்களுக்கு VHF, Sat Phones, Navtex, Navic மூலம் தகவல் தெரிவிக்கப்ட்டடு, அவர்கள் கரைக்குத் திரும்புகின்றனர். மேலும், மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 10 குழுக்கள் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், மயிலாடுதுறை, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்கு விரைந்துள்ளன.

சென்னை மாநகராட்சி பகுதி மற்றும் மாவட்டங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புயை பகுதிகளில் முகாமிட்டு முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், சென்னையில் 169 நிவாரண மையங்களும், தாழ்வான பகுதிகளில் மழை நீரை வெளியேற்ற 805 நீர் இறைப்பான்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், 5,093 நிவாரண முகாம்களும் அனைத்து மாவட்டங்களிலும் தயார் நிலையில் உள்ளன. பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை தொடர்ந்து கண்காணிக்க பல் துறை மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை முன்கூட்டியே மீட்டு நிவாரண முகாம்களில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அணைகள் மற்றும் நீர்த் தேக்கங்களில் நீர் இருப்பு, நீர் வரத்து ஆகியவை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். உபரி நீர் வெளியேற்றும் போது பொதுமக்களுக்கு உரிய முன்னறிவிப்பு வழங்க மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாநில அவசரகால செயல்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அளவிலான அவசரகால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் கூடுதலான அலுவலர்களுடன் இயங்குகின்றன'' என்று அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

### தொலைதூரக் கல்வியில் படித்தவர்கள் ஆசிரியராக தகுதியில்லை:

# ஆசிரியர் நியமன நடைமுறையை மறு ஆய்வு செய்ய வேண்டும்

## தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, டிச. 07-**

தொலைதூரக் கல்வியில் படித்தவர்கள் ஆசிரியர் பணிக்குத் தகுதியானவர்கள் அல்ல என்று தெரிவித்துள்ள சென்னை ஐகோர்ட், கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று படித்தவர்களையே ஆசிரியர்களாக நியமிக்கும் வகையில் ஆசிரியர் நியமன நடைமுறைகளை மூன்று மாதங்களில் மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று தமிழக பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அரசுப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வந்த நித்யா என்பவர் ஆங்கில பாடப் பிரிவிற்கான பட்டதாரி ஆசிரியராக பதவி உயர்வு வழங்க கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி. எஸ்.எம்.சுப்ரமணியம் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில், ''மனுதாரர், தமிழ் பாடப்பிரிவில் பி.எட்., படிப்பை முடித்துள்ளார். அதன்பின்னர், இளங்கலை ஆங்கிலத்தை தொலைதூர கல்வி முறையின் கீழ் படித்துள்ளார். எனவே, மனுதாரர் பதவி உயர்வுக்கு தகுதி பெறவில்லை'' எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, தமிழ் பாடத்திற்கான பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு மனுதாரரை பரிசீலிக்கலாம் என உத்தரவிட்டார். மேலும், கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று படித்தவர்களையே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் ஏற்கெனவே பல வழக்குகளில் தீர்ப்பளித்துள்ளது. தொலைதூரக் கல்வி மூலம் படித்தவர்கள் ஆசிரியர் பணிக்குத் தகுதியானவர்கள் அல்ல.

இட ஒதுக்கீட்டின் கீழ் நியமனம் மேற்கொள்வதாக இருந்தாலும் கூட, தகுதியானவர்களையே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். தற்போது ஆசிரியர்களாக உள்ள பெரும்பாலானோர் கல்லூரிகளுக்கு நேரடியாகச் சென்று படிக்காதவர்களாக இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

அகில இந்திய அளவில் கல்வியின் தரத்தில் தமிழகம் 27-வது இடத்தில் உள்ளது. கல்விக்கு 36,895 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் நிலையில், பெருந்தொகை ஆசிரியர்கள் ஊதியத்துக்கே செலவிடப்படுகிறது. ஆசிரியர்கள் நியமனம் தொடர்பான திட்டத்தை மூன்று மாதங்களில் மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறை செயலாளர்களுக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

# கருக்கலைப்பு குறித்து தாயின் முடிவே இறுதியானது

## டெல்லி உயர்நீதிமன்றம் கருத்து

**புதுடெல்லி, டிச. 07-**

டெல்லியைச் சேர்ந்த 26 வயது பெண் தனது 33 வார கருவை கலைக்க அனுமதிக்க வேண்டும் என்று டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். கருவில் உள்ள குழந்தைக்கு பெருமூளையில் கோளாறு ஏற்பட்டுள்ளதால் குழந்தையின் நலன் கருதி கருவைக் கலைக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதிபதி பிரதீபா சிங் அமர்வு முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி தெரிவிக்கையில்., மருத்துவர்கள் மறுத்த போதிலும் பெண்ணின் 33 வார கருவைக் கலைக்க அனுமதி வழங்கி இந்தியாவில் கருக்கலைப்பு குறித்து பெண் முடிவு செய்ய சட்டத்தில் அதிகாரம் உண்டு என்று தெரிவித்தார்.

'கருவை கலைப்பது குறித்த கர்ப்பிணி பெண்ணின் உரிமை உலகம் முழுவதும் விவாதப் பொருளாக உள்ளது. கருக்கலைப்பு விவகாரத்தில் தாய் எடுக்கும் முடிவே இறுதியானது. ஒரு பெண்ணின் பிரசவ விருப்பத்தையும், பிறக்காத குழந்தையின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான வாய்ப்பையும் அங்கீகரிக்க வேண்டும்.

ஒரு பெண், குழந்தையைப் பெற்றெடுக்க விரும்புகிறாளா என்ற இறுதித் தேர்வு அந்தப் பெண்ணிடமே உள்ளது. இதனை சட்டத்தின் மூலமாக அங்கீகரிக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. கருக்கலைப்புக்கு மருத்துவக்குழுவின் கருத்தும் முக்கியமானதுதான். குழந்தையின் நலன் கருதி இந்த கருத்துகள் விரிவானதாக இருக்க வேண்டும். இது போன்ற விஷயத்தில் தரமான அறிக்கைகளுடன் வேகமும் முக்கியம்' என்றார்.

# படை வீரர்களின் குடும்பங்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்து தருவது நமது கடமை

## முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிக்கை



**சென்னை, டிச. 07-**

படைவீரர்களின் குடும் பங்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துத் தருவது நம் மகத்தான கடமை என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள கொடி நாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இல்லத்தை மறந்து, எல்லையோரத்தில் பல இன்னல்களைத் தாங்கி, நாட்டுப்பற்று என்கிற நம்பிக்கையை மட்டும் இதயத்தில் ஏந்தி, இந்திய ஒருமைப்பாட்டுக்காக தவம் இருக்கிற முப்படை வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்து, நம் சேமிப்பின் ஒரு பகுதியை ஒப்படைக்கும் உன்னதத் திருநாள் இந்தக் கொடிநாள்.பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்து, நாட்டின் அத்தனை பகுதிகளையும் பத்திரப்படுத்தும் உத்தமச் செயலை சமரசம் செய்து கொள்ளாமல், உயிரைத் துச்சமென மதித்து, சிருடைக்கள் தங்கள் எண்ணச் சிறகுகளையெல்லாம் ஒடுக்கி, ஆசைகளையெல்லாம் குறுக்கி, பகைவர்களை விரட்டும் ஒப்பற்ற செயலை மேற்கொள்கின்ற படை வீரர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துத் தருவது நம் மகத்தான கடமை.படை வீரர்களின் வாழ்க்கை, நம் இல்லத்தை பார்த்துக் கொள்ள நாடே அணிதிரண்டு நிற்கிறது என்கிற நன்னம்பிக்கை ஒளியில், கொடி நாளுக்கு கொடுக்கும் நம் கொடையே அத்தாட்சி. அது அவர்களின் குடும்பத்தினருக்கு பல்வேறு வகைகளில் பயன் தரும். கொடி நாளில் பெரும் தொகையை வசூலித்துத் தருகிற செயலில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இந்த ஆண்டும் பெருமளவில் நிதி வழங்கி, அவர்தம் குடும்பத்தினருக்கு வணக்கத்தையும், நன்றியையும் காணிக்கையாக்கிட, உங்களுக்கு என் கோரிக்கையை வைக்கிறேன். இவ்வாறு அந்த அறிவிப்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# கவர்னர் பதவிக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட வேண்டும்: தமிழிசை

**சென்னை, டிச. 07-**

கவர்னர் பதவி என்பது முதல் குடிமகன் என்பதால் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுக்கத்தான் வேண்டும் என்று ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள அம்பேத்கர் மணிமண்டபத்தில் தெலுங்கானா மாநில கவர்னரும், புதுச்சேரி துணை நிலை ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,

அரசியலமைப்பின் தந்தை சட்ட மேதை அம்பேத்கர். அவரது நினைவு நாளை போற்றுவதில், மரியாதை செலுத்துவதில் பெருமை கொள்கிறேன். ஜி-20 மாநாட்டிற்கு நாம் தலைமை தாங்குகிறோம். ஜி-20 மாநாடு குறித்து வரும் 9-ம் தேதி பிரதமர் மோடி, ஆளுநர், துணை நிலை ஆளுநர் மற்றும் முதல்வர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

ஜி-20 மாநாட்டின் பெருமை குறித்து கட்டுரை, பேச்சுப் போட்டிகள் தெலுங்கானா மற்றும் புதுவையில் நடத்த இருக்கிறோம். கவர்னர் பதவி என்பது ஒரு முதல் குடிமகன். அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுக்கத்தான் வேண்டும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். முழுமையாக கவர்னரை திரும்பப் பெற வேண்டும் என்று வழக்கு தொடர்வது சரியில்ல என்பதுதான் என்னுடைய கருத்து. இவ்வாறு அவர் கூறினார்.

# அம்பேத்கர் 66-வது நினைவு நாள்: ஜனாதிபதி, பிரதமர் அஞ்சலி



**புதுடெல்லி, டிச. 07-**

அம்பேத்கர் நினைவு நாளையொட்டி ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர். நாடு முழுவதும் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 66-வது நினைவு நாள் நேற்று அனுசரிக்கப்பட்டது. பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிலையில், பாராளுமன்ற வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலை முன்பு ஜனாதிபதி திரௌபதி முர்மு நேற்று காலை மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில், துணை ஜனாதிபி ஜகதீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, அமைச்சர்கள், எம்.பி.க்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.அஞ்சலி செலுத்திய பின்னர் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், மகாபரிநிர்வாண் தினத்தில், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் நமது நாட்டுக்கு ஆற்றிய சிறப்பான சேவையை நினைவுகூர்ந்து நான் அவருக்கு மரியாதை செலுத்துகிறேன். அவரது போராட்டங்கள் லட்சக்கணக்கானோருக்கு நம்பிக்கையை அளித்தது. மிக விரிவான அரசியல் சாசனத்தை இந்தியாவுக்கு அளிக்க அவர் மேற்கொண்ட முயற்சிகள் ஒருபோதும் மறக்க முடியாதவை. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ராஜ்பவனில் அம்பேத்கர் உருவச்சிலை: கவர்னர் ஆர்.என்.ரவி திறந்து வைத்தார்



**சென்னை, டிச. 07-**

சென்னை கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள டாக்டர் அம்பேத்கரின் முழு உருவ வெண்கல சிலையை கவர்னர் ஆர்.என். ரவி நேற்று திறந்து வைத்தார்.

டாக்டர் அம்பேத்கரின் 66-வது நினைவு நாள் நேற்று கடைபிடிக்கப்பட்டது. சென்னை கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் டாக்டர் அம்பேத்கரின் முழு உருவ வெண்கல சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழா நேற்று காலை நடைபெற்றது. விழாவில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி பங்கேற்று அம்பேத்கர் சிலையை திறந்து வைத்தார்.

அம்பேத்கரின் சிலை அருகே அவரது உருவ படம் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தது. அம்பேத்கரின் உருவப் படத்துக்கு கவர்னர் ரவி மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் அங்கு நடந்த நிகழ்ச்சியில் கவர்னர் ஆர்.என்.ரவி பங்கேற்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் எல்.முருகன், அமைச்சர் கயல்விழி செல்வராஜ், தலைமை செயலாளர் இறையன்பு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிண்டி கவர்னர் மாளிகையில் ஏற்கனவே திருவள்ளுவர், அவ்வையார், பாரதியார், முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் ஆகியோரின் நினைவை போற்றும் வகையில் சிலைகள் திறக்கப்பட்டுள்ளன. தற்போது அம்பேத்கரின் சிலை திறக்கப்பட்டுள்ளது.

# மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி 90 சதவீதத்தை எட்டியுள்ளது

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு

**சென்னை, டிச. 07-**

கொரோனாவை முழுமையாக கட்டுப்படுத்தி உள்ளோம் என்றும், மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி 90 சதவீதத்தை எட்டியுள்ளது என்றும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து துறையின் நூற்றாண்டு நிறைவு மாநாடு நடந்தது. இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு, மாநாட்டின் சிறப்பு இசை பாடல், நூற்றாண்டு நினைவு சிறப்பு அஞ்சல் உறையை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது.

தொடக்கத்தில் கொரோனா தொற்று மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தினாலும், முதல்வர் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மிகவும் திறமையாக கொரோனா பெருந்தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பூசியை பொறுத்தவரை முதல் தவணை தடுப்பூசி 96 சதவீதம் பேருக்கும், 2-ம் தவணை தடுப்பூசி 92 சதவீத பேருக்கும் போடப்பட்டுள்ளது. மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி 90 சதவீதத்தை எட்டியுள்ளது. யானைக்கால் நோயால் இதுவரை 8,023 பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். பொது மக்கள் நலனுக்காக முதல்வர் சமீபத்தில் 389 நடமாடும் மருத்துவ வாகனத்தை தொடங்கி வைத்துள்ளார். இந்த துறை இன்னும் 100 ஆண்டுகளுக்கு மேல் மிகவும் சிறப்பாக செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# பாரதீய ஜனதாவில் இருந்து விலகினார் திருச்சி சூர்யா


**சென்னை, டிச. 07-**

பா.ஜ.க.வில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட திருச்சி சூர்யா, அக்கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

கட்சி பொறுப்புகளில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருந்த நிலையில், பா.ஜ.க.வுடனான உறவை முடித்து கொள்வதாக சூர்யா தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். அண்மையில் பா.ஜ.க. பெண் நிர்வாகியிடம் தொலைபேசியில் ஆபாசமாக திருச்சி சூர்யா பேசிய ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக நடவடிக்கை எடுத்த தமிழக பா.ஜ.க. தலைமை, திருச்சி சூர்யா பா.ஜ.க.வின் அனைத்து பொறுப்புகளில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்படுவதாக அறிவித்தது. இந்த நிலையில், பா.ஜ.க.வில் இருந்து விலகுவதாக திருச்சி சூர்யா அறிவித்துள்ளார். மாநில அமைப்பு செயலாளர் கேசவ விநாயகத்தை மாற்றினால் மட்டுமே பா.ஜ.க. வளரும் எனவும் அவர் தனது விலகல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டிலேயே முதல் முறையாக

# ஐதராபாத்தில் ஏ.டி.எம். மூலம் தங்கம் வாங்கலாம்



**ஐதராபாத், டிச. 07-**

வழக்கமாக ஏ.டி.எம். இயந்திரத்தில் இருந்து எல்லோரும் அச்சடித்த கரன்சி நோட்டுகளைதான் எடுப்போம். இந்தச் சூழலில் ஏ.டி.எம். மூலம் தங்கம் வாங்கலாம் என தெரிவித்துள்ளது ஐதராபாத் நகரில் இயங்கி வரும் கோல்ட்சிக்கா நிறுவனம். நாட்டிலேயே முதல் முறையாக இந்த முயற்சியை முன்னெடுத்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. உலக அளவில் தங்கத்தை அதிகம் நுகர்வு செய்து வரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அதனால், நம் நாட்டில் தங்கத்திற்கான டிமாண்ட் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு தங்க நுகர்வை 24x7 என்ற கணக்கில் எந்நேரமும் பெற இந்த கோல்டு ஏ.டி.எம். அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கோல்டு ஏ.டி.எம். மூலம் தங்கம் வாங்குவது எப்படி?

வழக்கமாக ஏ.டி.எம். இயந்திரத்தில் இருந்து பணம் எடுக்கும் அதே நடைமுறை தான் இதற்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கோல்ட் ஏ.டி.எம்.-ல் டெபிட் மற்றும் கிரெடிட் கார்டுகளை பயனர்கள் பயன்படுத்த முடியுமாம். தங்க காசுகளை மட்டுமே இந்த கோல்டு ஏ.டி.எம். மூலம் பயனர்கள் பெறமுடியும். 0.5 கிராம் முதல் 100 கிராம் வரையில் தங்க காசுகள் இந்த ஏ.டி.எம்.-ல் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சுத்தமான அசல் 24 கேரட் தங்க காசுகளை இந்த கோல்டு ஏ.டி.எம். வழங்குமாம்.

இந்த ஏ.டி.எம். இப்போது ஐதராபாத் - பேகும்பேட் பிரகாஷ் நகர் மெட்ரோ நிலையம் அருகே நிறுவப்பட்டுள்ளதாம். பயனர்கள் தங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில் தங்கத்தை இந்த கோல்டு ஏ.டி.எம். மூலம் வாங்கலாம் என கோல்ட்சிக்கா நிறுவனம் தெரிவித்துள்ளது.

# தமிழகத்தில் சத்துணவு மையங்களை மூடும் திட்டம் ஏதுமில்லை: அமைச்சர்

**சென்னை, டிச. 07-**

தமிழகத்தில் சத்துணவு மையங்களை மூடும் திட்டம் ஏதுமில்லை என்று அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

சத்துணவு மையங்களை மூட முடிவு செய்துள்ளதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழகத்தில் 43 ஆயிரத்து 190 பள்ளி சத்துணவு மையங்களில் சுமார் 46 லட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். ஒவ்வொரு சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை விவரங்களின் அடிப்படையில், சத்துணவு மையங்களில் உள்ள காலிப் பணியிடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், 28 ஆயிரம் சத்துணவு மையங்களை மூட திட்டமிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளி வந்துள்ளன. சத்துணவு மையங்களை மூடும் எண்ணம் அரசுக்கு அறவே கிடையாது. பள்ளி, சத்துணவு மையங்களில் எண்ணிக்கை அல்லது பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ளார். மேலும் சத்துணவுத் திட்டத்தை வலுப்படுத்தவும், தொடர் கண்காணிப்பு செய்யவும்தான் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதில் யாருக்கும் எந்தவொரு சந்தேகமும் ஏற்பட வேண்டிய அவசியமில்லை. வரும் ஆண்டில் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இப்படிப்பட்ட சூழலில், சத்துணவுத் திட்டத் துறையில் உள்ள சத்துணவு மையங்களை மூட அரசு எப்படி முயற்சிக்கும். சத்துணவு மையங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பவும், சத்தான உணவை முறையாக மாணவர்களுக்கு வழங்கவும், தொடர் கண்காணிப்பை வலுப்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

# பிரதமரின் பரிசு பொருள்களை ஏலத்தில் எடுத்த சேலத்துக்காரர்

**சேலம், டிச. 07-**

பிரதமரின் பரிசு பொருள்களை ஏலத்தில் எடுத்த சேலத்துக்காரர், பிரதமரின் பரிசு பொருள் தங்களுடைய வீட்டில் இருப்பது குறித்து பெருமிதம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தனக்கு கிடைக்கும் பரிசுப் பொருள்களை ஆண்டுக்கு ஒரு முறை ஏல விற்பனை செய்து, அதன் வாயிலாக கிடைக்கும் தொகையினை பெண் குழந்தைகளின் கல்விக்காக செலவு செய்து வருகிறார். பிரதமர் கலந்து கொள்ளும் பல்வேறு விழாக்களில் கிடைக்கும் பரிசு பொருள்கள் மின்னணு முறையில் ஏலம் விடப்படுகிறது. இதை நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் ஏலத்தில் எடுத்து வருகின்றனர். இந்த ஆண்டு நடந்த ஏலத்தில் சேலம் அன்னதானப்பட்டியைச் சேர்ந்த பழைய இரும்புக் கடை வியாபாரி கார்த்திகேயன், பிரதமருக்கு பரிசாக கிடைத்த திருவள்ளுவர் சிலையையும் பட்டு வேஷ்டிகளையும் 32 ஆயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்துள்ளார். ஏலத்தில் எடுக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் கார்த்திகேயன் வீட்டுக்கே கொண்டு வந்து வழங்கப்பட்டது. திருவள்ளுவர் சிலை மற்றும் பட்டு வேஷ்டிகளை பெற்றுக் கொண்ட அவர் பிரதமர் பயன்படுத்திய பொருள்கள் தமிழகத்தில் குறிப்பாக தனது வீட்டில் இருப்பது பெருமைக்குரியதாக கருதுவதாக தெரிவித்தார்.

## ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயில்:

# அதிநவீன சிக்னலுக்கு ரூ.1,620 கோடியில் ஒப்பந்தம்

**சென்னை, டிச. 07-**

ஓட்டுநர் இல்லாத தானியங்கி மெட்ரோ ரயில்களை இயக்க ரூ. 1,620 கோடி மதிப்பில் அதிநவீன சமிக்ஞை(சிக்னல்) ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவடைந்த பின், ஓட்டுநர் இல்லாத தானியங்கி ரயில்கள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தானியங்கி ரயில்களை இயக்க தேவையான சிக்னல், ரயில் இயக்க கட்டுப்பாடு காணொளி மேலாண்மை போன்ற அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தப்புள்ளியை, ஹிட்டாச்சி நிறுவனத்திற்கு ரூ. 1,620 கோடிக்கு மெட்ரோ நிர்வாகம் அளித்துள்ளது.

சிக்னல், ரயில் கட்டுப்பாடு மற்றும் காணொளி மேலாண்மை அமைப்பினை வடிவமைத்து, உற்பத்தி செய்து, நிறுவி, சோதித்து செயல்படுத்தும் பணியை ஹிட்டாச்சி நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது. இதன்மூலம், குறைந்தபட்ச இடைவெளியான 1 நிமிடம் 30 வினாடிகளில் தானியங்கி முறையில் ரயில்களை இயக்க முடியும். பணிமனைக்குள் ரயில்கள் வந்து செல்வதும், நடைமேடை தடுப்பு கதவுகளின் செயல்பாடு, பயணிகளுக்கான தகவல் மற்றும் காட்சி அமைப்புகளுடனும் ஒருங்கிணைக்கப்படும். இந்த அமைப்பு, மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் இயக்க கட்டுப்பாட்டு அறையிலிருந்து வரும் கட்டுப்பாட்டு சிக்னல் ஆகியவற்றை உடன் நிகழ்வு நேரத்தின்படி காணொளியை காட்சிப்படுத்த வகை செய்கின்றது.

## தமிழகத்திற்கு புயல் எச்சரிக்கை:

# தலைமைச் செயலாளர் அவசர ஆலோசனை

**சென்னை, டிச. 07-**

தமிழகத்திற்கு புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், தென்மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலசந்திரனுடன் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு ஆலோசனையில் ஈடுபட்டார்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு கனமழை பெய்தது. இந்நிலையில், தற்போது மீண்டும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. அந்தமான் அருகே உருவாகியுள்ள புதிய காற்றழுத்தத் தாழ்வு பகுதியானது நேற்று காலை ஆழ்ந்த காற்றழுத்தத்தாழ்வுப் பகுதியாக உருவாகியிருப்பதாகவும், நேற்று மாலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி, இன்று புயலாக மாறும் என்றும் வானிலை மையம் கணித்துள்ளது.

இதனால், நாளை (டிசம்பர் 8 ) மற்றும் 9-ம் தேதிகளில் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 9ஆம் தேதி சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் இறையன்பை நேரில் சந்தித்து சென்னை வானிலை மைய இயக்குநர் பாலசந்திரன் ஆலோசனை நடத்தினார். மழையின் தன்மை, எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனையில் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளனர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

# கொலம்பியாவில் திடீர் நிலச்சரிவு: 27 பேர் பலி

**பகோடா, டிச. 07-**

கொலம்பியாவில் ஏற்பட்ட திடீர் நிலச்சரிவில் சிக்கி 27 பேர் பலியானதாக தகவல் வெளியாகி உள்ளது.

தென் அமெரிக்கா நாடான கொலாம்பியாவில் உள்ள பியூப்லோ ரிகோ பகுதியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக அப்பகுதியில் உள்ள நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், நதிகளின் ஓரம் உள்ள பொதுமக்கள் வசிப்பிடங்களில் நேற்று முன்தினம் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கி சுமார் 27 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியானது. மேலும், பலர் மண் சரிவில் சிக்கி புதையுண்டு போனதாகவும், அவர்களை மீட்கும் பணியில் ராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்தது. இதுதொடர்பாக அந்நாட்டு அதிபர் கூறுகையில், நிலச்சரிவில் சிக்கி 3 சிறுவர்கள் உள்பட 27 பேர் பலியாகி உள்ளனர் என தெரிவித்தார். தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# நீர்மட்டம் உயர்வு: 3-வது முறையாக மேட்டூர் அணை நிரம்ப வாய்ப்பு

**சேலம், டிச. 07-**

நீர்மட்டம் உயர்ந்து வருவதால் இந்த ஆண்டில் 3-வது முறையாக மேட்டூர் அணை நிரம்ப வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து, ஒகேனக்கல் மற்றும் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிப்பதும், சரிவதுமாக உள்ளது. ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 3-வது நாளாக நேற்று முன்தினம் 9,500 கன அடியாக நீடித்தது. அதேசமயம், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 10,962 கனஅடியாக வந்த நீர்வரத்து நேற்று சற்று குறைந்து 9,566 அடியாக வந்து கொண்டு இருந்தது.

இந்நிலையில், காவிரி டெல்டா பாசன பகுதியில் மழை பெய்து வருவதால், நேற்று முன்தினம் மாலை முதல் நீர்திறப்பு 2 ஆயிரம் கனஅடியில் இருந்து 1000 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு 600 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணைக்கு வரும் நீரின் அளவை விட, பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு குறைவாக இருப்பதால், நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் 119.05 அடியாக நீர்மட்டம் சற்று உயர்ந்து நேற்று காலை 119.32 அடியாக உயர்ந்தது. அணையின் நீர்திறப்பும், வரத்தும் இதே நிலையில் நீடித்தால் இந்த வார இறுதியில் இந்த ஆண்டில் மேட்டூர் அணை 3-வது முறையாக நிரம்பும் வாய்ப்பு உள்ளது என நீர்வளத்துறை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தலைவர்கள் சொல்வதை படிங்க...



மாணவர்களின் கற்றல் திறனை ஊக்குவிக்க பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வகுப்புக்கு ஓர் ஆசிரியர் வீதம் நியமிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஆசிரியர்கள் நியமனத்தை ஓர் இயக்கமாக கருதி அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- ராமதாஸ்



ஆன்லைன் ரம்மி தடைச் சட்ட மசோதா தொடர்பாக அரசு எடுக்கிற முடிவுக்கு கவர்னர் இதுவரை ஒத்துழைக்கவில்லை. ஜெயலலிதா, கருணாநிதி இருக்கும்போது கவர்னர் எங்கே இருக்கிறார் என்று கூட தெரியாது.

- சீமான்



கவர்னர் பதவி என்பது ஒரு முதல் குடிமகன். அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுக்கத்தான் வேண்டும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். முழுமையாக ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என்று வழக்கு தொடர்வது சரியல்ல.

- தமிழிசை



ஒரு நாடாளுமன்ற அமைப்பில் மாநில கவர்னர்களுக்கு எந்தத் தேவையும் இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு உள்ள மாநிலங்களில் கவர்னர்களுக்கு என்ன தேவையுள்ளது ? எனவே கவர்னர் பதவியை ஒழிக்க வேண்டும்.

- டி.ராஜா

# சினிமா CINI செய்திகள்

## ஹாலிவுட் தரத்தில் உருவாகும் பாம்பாட்டம்



பிலிம் கார்டன் பட நிறுவனம் சார்பில் வி.பழனிவேல் தயாரிப்பில் சி.வடிவுடையான் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் பாம்பாட்டம். வரலாற்று பின்னணியில் உருவாகியுள்ள இப்படத்தில் ராணியாக மல்லிகா ஷெராவத்.

நான் அவனில்லை பட புகழ் ஜீவன் இரட்டை வேடங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் ஹாலிவுட் தரத்தில் உருவாகியுள்ள இப்படத்தின் நடிகர் ஆர்யா வெளியிட்டார். படம் குறித்து இயக்குனர் வி.சி.வடிவுடையான் பேசுகையில், இப்படத்தில் 120 அடி நீள ராட்சத பாம்பு ஒன்று ஹாலிவுட் தரத்தில் மிரட்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

எல்லோருடைய வாழ்க்கையுமே ஒரு பரமபதம் தான். அதுபோல ஒரு சாம்ராஜ்யத்தின் பரமபத ஆட்டம்தான் இந்த பாம்பாட்டம் படத்தின் கதை என்றார். மேலும் ரித்திகா சென், யாஷிகா ஆனந்த், சாய் ப்ரியா, சுமன், கிரிக்கெட் விளையாட்டு வீரர் சலீல் அங்கோலா, பருத்திவீரன் சரவணன், ரமேஷ் கண்ணா உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடித்துள்ளனர்.

ஒளிப்பதிவு இனியன் J ஹாரீஸ், இசை அம்ரிஷ், எடிட்டிங் சுரேஷ் அர்ஸ், கலை C.E.சண்முகம், ஸ்டன்ட் சூப்பர் சுப்பராயன், நடனம் அசோக்ராஜா,மக்கள் தொடர்பு மணவை புவன், இணை தயாரிப்பு பண்ணை A.இளங்கோவன், தயாரிப்பு V.பழனிவேல்.

## கட்டா குஸ்தி - விமர்சனம்



இயக்குனர் செல்லா அய்யாவு இயக்கத்தில் விஷ்ணு விஷால், ஐஸ்வர்யா லட்சுமி, முனிஷ்காந்த், கருணாஸ் உள்ளிட்டோர் நடிப்பில் வெளியாகி உள்ள படம் கட்டா குஸ்தி. குஸ்தி சண்டையை மையமாக வைத்து இந்த படம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. படத்தில் சிறு வயதிலேயே விஷ்ணு விஷாலின் அப்பா, அம்மா இறந்து விட, அவரது மாமாவான கருணாஸ் தான் உலகம் என்று வாழ்கிறார். பெண் என்பவள் ஆணுக்கு கீழ் தான். ஆணுக்கு அடங்கியிருக்க வேண்டும் என்ற சிந்தனையோடு இருப்பவர் கருணாஸ். அதை விஷ்ணு விஷாலுக்கும் புகுத்துகிறார். இந்நிலையில் கட்டா குஸ்தி வீராங்கனையுடன் விஷ்ணுவுக்கு திருமணம் நடக்கிறது. பின்னர் நடக்கும் கலாட்டா தான் கட்ட குஸ்தி படத்தின் கதை. எஃப்.ஐ.ஆர் படத்திற்குப் பிறகு விஷ்ணு விஷாலுக்கு நல்ல ஒரு படமாக கட்டா குஸ்தி அமைந்திருக்கிறது. படத்தில் பெயருக்கு தான் விஷ்ணு விஷால் கதாநாயகன். ஆனால், உண்மையிலேயே படத்தின் கதாநாயகன் என்று பார்த்தால் கதாநாயகியாக வரும் ஐஸ்வர்யா லட்சுமி தான். இயக்குநர் செல்லா அய்யாவு இயக்கத்தில் வெளியாகி உள்ள இந்த படம் ஃபேமிலி என்டர்டெயின்மென்ட்டாகவும் கணவன், மனைவி இடையே ஏற்படும் கருத்து வேறுபாடு சிக்கல்களையும் அழகாக கையாண்டுள்ளது படத்திற்கு பெரிய பலமாக மாறி உள்ளது. ஸ்போர்ட்ஸ் விளையாடும் பெண்கள் எதிராளியை ஜெயிப்பதற்கு முன்பாக தனது குடும்பத்தை ஜெயிக்க வேண்டி இருக்கும் என்கிற கருத்தை காமெடி கலந்து கொடுத்துள்ள இயக்குநர் செல்லா அய்யாவுக்கு பாராட்டுக்கள். மொத்தத்தில் கட்டா குஸ்தி இந்த வருடத்தின் சிறந்த திரைப்படங்களில் ஒன்று என்று சொல்லலாம்.

## இந்த வாரம் வெளியாகும் விஜயானந்த்



ஒரே ஒரு டிரக்கை வைத்து தொழில் தொடங்கி 4300 வாகனங்களுக்கு சொந்தக்காரராக மாறிய ஒரு தொழிலதிபரின் வாழ்க்கை தான் விஜயானந்த் திரைப்படம். பிரமாண்ட பட்ஜெட்டில் பான் இந்திய திரைப்படமாக உருவாகியுள்ள இப்படம் இம்மாதம் ஒன்பதாம் தேதியன்று தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், இந்தி என இந்திய மொழிகளில் வெளியாகிறது.

வி ஆர் எல் நிறுவனத்தின் உரிமையாளரும், தொழிலதிபருமான விஜய் சங்கேஸ்வரின் வாழ்க்கை வரலாற்றை தழுவி இத்திரைப்படம் உருவாகியுள்ளது.

ரிஷிகா சர்மா இயக்கத்தில் தயாராகியிருக்கும் இந்த திரைப்படத்தில் கதையின் நாயகனான விஜய் சங்கேஸ்வர் கதாபாத்திரத்தில் நிஹால் நடித்திருக்கிறார். கீர்த்தன் பூஜாரி ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு கோபி சுந்தர் இசையமைத்திருக்கிறார். இப்படத்தின் செய்தியாளர் சந்திப்பில் பேசிய படத்தின் நாயகன் நிஹால், ஒரு தலைமுறைக்கு நம்பிக்கை தரும் மிகப்பெரும் சாதனையாளராக நான் நடிப்பது பெருமை. நாம் எல்லாம் சாதாரண மனிதர்கள் லீவு நாளில் ஓய்வெடுப்போம் ஆனால் இவர் எத்தனையோ ஆண்டுகள் ஓய்வில்லாமல் உழைத்திருக்கிறார்.

வாழ்வில் வெற்றிபெற விரும்பும் அனைவருக்கும் இது ஒரு பாடம் என்றார். இதனை திரைப்படமாக எடுப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். இப்படத்திற்காக அனைவரும் கடுமையாக உழைத்துள்ளனர் என்றார்.

## சூப்பர் குட் பிலிம்ஸின் வரலாறு முக்கியம்



சூப்பர் குட் பிலிம்ஸ் ஆர்.பி. சௌத்ரி தயாரிப்பில், ஜீவா நடிப்பில் இயக்குநர் சந்தோஷ் ராஜன் இயக்கியுள்ள திரைப்படம் வரலாறு முக்கியம். ரொமான்ஸ் காமெடி ஜானரில் கம்ர்ஷியல் திரைப்படமாக உருவாகியுள்ள இப்படம் டிசம்பர் 9 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. இந்நிலையில் இப்படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பு சமீபத்தில் நடைபெற்றது. அப்போது பேசிய ஜீவா, SMS படத்திற்கு பிறகு அது போன்று ஒரு படம் வேண்டும் என்று அனைவரும் என்னை கேட்டார்கள். அப்படி ஒரு படமாய் தான் இந்த வரலாறு முக்கியம் வந்துள்ளது. இந்த படத்தின் இயக்குனர் மிகவும் அதிகமான காமெடி உணர்வு உள்ளவர். அது படத்திலும் பிரதிபலித்துள்ளது. ஹீரோயின் பிரக்யா மற்றும் காஷ்மீரா இருவருடன் பணியாற்றியது மகிழ்ச்சியை தருகிறது. இத்திரைப்படத்தில், VTV கணேஷ், K.S.ரவிக்குமார், மொட்ட ராஜேந்திரன், ஷாரா, சரண்யா, டி எஸ் கே, சித்திக் மற்றும் பலர் நடித்துள்ளனர். சக்தி சரவணன் ஒளிப்பதிவு, ஸ்ரீகாந்த் N.B. எடிட்டிங், மோகன் கலை, சக்தி சரவணன் ஸ்டண்ட்ஸ், பிருந்தா நடனம், மற்றும் சுரேஷ் சந்திரா-ரேகா D'One மக்கள் தொடர்பு பணிகளை செய்துள்ளனர்.

## டிச.9ல் வெளியாகும் யோகிபாபுவின் தாதா



Any Time Money பிலிம்ஸ் சார்பில் கின்னஸ் கிஷோர் கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்கியுள்ள படம் தாதா. இந்த படத்தில் யோகிபாபு, நிதின் சத்யா இருவரும் கதாநாயகர்களாக நடித்துள்ளனர். கதாநாயகியாக காயத்ரி நடித்திருக்கிறார் மற்றும் நாசர், மனோபாலா, சிங்கமுத்து, புவனேஸ்வரி, உமா ஆகியோரும் நடித்துள்ளனர். படம் பற்றி இயக்குனர் கின்னஸ் கிஷோர் பேசுகையில், இது முழுக்க முழுக்க நகைச்சுவையை மையமாக வைத்து எடுக் கப் பட்டுள்ள படம். இதில் நிதின் சத்யா, யோகிபாபு, நாசர் கூட்டணியில் காமெடி காட்சிகள் மிகச் சிறப்பாக வந்திருக்கிறது இந்த படத்தில் நாசர் ஒரு வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார் அது மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெறும் என்றார். இப்படம் இம்மாதம் 9 ம் தேதி திரையரங்குகளில் வெளியாக இருக்கிறது என்றார்.

## 77 விருதுகளை குவித்த சஷ்தி குறும்படம்



Cathy & Raphy பிலிம்ஸ் தயாரிப்பில், ஜூட் பீட்டர் டேமியான் இயக்கத்தில் உருவாகியுள்ள குறும்படம் சஷ்தி. பெறாத மகனுக்காக தியாகம் செய்யத்துணிந்த தாயின் அன்பு தான் சஷ்தி குறும்படத்தின் ஒரு வரிக்கதை. 30 நிமிடங்களிள் உருவாகியுள்ள இதில் செம்மலர் அன்னம், லிசி ஆண்டனி, டாக்டர் SK காயத்ரி, ஹாரிஸ், மாஸ்டர் ஜெப்ரி ஜேம்ஸ் ஆகியோர் நடித்துள்ளனர். 35 சர்வதேச திரைப்பட விழாக்களில் கலந்து கொண்டு பல்வேறு பிரிவுகளில் 77 விருதுகளை வென்றுள்ள இந்த குறும்படத்தின், திரையிடல் மற்றும் விருது பெற்ற கலைஞர்களை கவுரவிக்கும் விழா சமீபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கே.பாக்யராஜ் கலந்து கொண்டு இந்த குறும்படத்தில் பணியாற்றி பல்வேறு பிரிவுகளில் சர்வதேச விருதுகளை வென்ற கலைஞர்களுக்கு அந்த விருதுகளை இயக்குனர் கே.பாக்யராஜ் வழங்கி கௌரவித்தார். அப்போது பேசிய இக்குறும்படத்தின் இயக்குனர் ஜூட் பீட்டர் டேமியான், இந்த குறும்படத்தை ஒரு வாரத்திற்குள் படமாக்கி முடித்து விட்டாலும் இதற்கான கதை மற்றும் திரைக்கதையை உருவாக்க ஒரு வருட காலத்திற்கு மேல் ஆனது. படப்பிடிப்பின்போதே லைவ் ரெக்கார்டிங் முறையில் வசனங்கள் ஒளிப்பதிவு செய்யப்பட்டன என்றார். மேலும்,சினிமாவில் பணியாற்றும் கலைஞர்களுக்கு சமூக பாதுகாப்பு இல்லை.. அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத என எந்த துறையினருக்கும் பிஎப். ஈஎஸ்ஐ போன்றவை கிடைக்கப்பெற வேண்டும் என சட்டம் சொல்கிறது.. அவற்றை இந்த சினிமா கலைஞர்களுக்கும் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். என்று அரசுக்கு கோரிக்கை வைத்தார்.

## வதந்தி – விமர்சனம்



ஆண்ட்ரூ லூயிஸ் இயக்கத்தில் தற்போது வெளியாகியுள்ள வலைதள தொடர் வதந்தி – தி ஃபேபிள் ஆஃப் வெலோனி'. இதில் எஸ். ஜே. சூர்யா, ஸ்மிருதி வெங்கட் சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி, விவேக் பிரசன்னா, நாசர், லைலா, குமரன் தங்கராஜன், உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். ஒளிப்பதிவு சரவணன், இசை சைமன் கே கிங், தயாரிப்பு புஷ்கர் காயத்ரி. கன்னியாகுமரி பகுதியை சுற்றி இக்கதை நடக்கிறது. ஆரம்பத்தில் ஒரு பெண் மர்மமான முறையில் கொலை செய்யப்படுகிறார். அது ஒரு ஹீரோயின் என்று ஊடகங்களில் சொல்லப்படுகிறது.

ஆனால், இறந்ததாக சொல்லப்படும் ஹீரோயின் உயிருடன் இருக்கிறார் என்பது தெரிய வருகிறது. இறந்தது யார் என்ற விசாரணையை துவக்குகிறது போலீஸ். இதன் சிறப்பு அதிகாரியாக எஸ்ஜே சூர்யா நியமிக்கப்படுகிறார். பின்பு அவர் எப்படி இந்த கொலையை கண்டுபிடிக்கிறார் என்பதை பல சுவாரஸ்யங்களுடன் அடுத்தடுத்து நகர்கிறது இத்தொடர்.. எஸ்ஜே சூர்யா வழக்கம் போல நடிப்பில் அசத்தி இருக்கிறார். கொலையை அவர் துப்பறியும் காட்சிகள் பிரமாதம். 8 எபிசோடுகளாக இந்த வதந்தி வலைத்தளத் தொடர் அமேசான் பிரைமில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கிறது. இந்த கதையை இயக்குனர் ஆண்ட்ரூஸ் லூயிஸ் நேர்த்தியாக இயக்கி இருக்கிறார். பார்வையாளர்கள் யூகிக்க முடியாத வகையில் சில சுவாரசியமான திருப்பங்களை கொடுத்திருக்கிறார். குறிப்பாக ஒளிப்பதிவு, பின்னணி இசை, எடிட்டிங் என அனைத்தும் கூடுதல் வலுசேர்த்து இருக்கிறது. மொத்தத்தில் திரில்லர், க்ரைம் பாணியில் வதந்தியும் வலு செர்த்துள்ளது.

## விஜய் சேதுபதியின் டி.எஸ்.பி. - விமர்சனம்



விஜய் சேதுபதியின் நடிப்பில் பொன்ராம் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் டிஎஸ்பி.. கதை; வேலை செய்தால் அரசாங்க வேலைதான் செய்ய வேண்டும் என்ற தனது தந்தையின் ஆசையை நிறைவேற்ற முயற்சி செய்து வருகிறார் நாயகன் விஜய் சேதுபதி. அதே நேரம் அணு க்ரீத்தியுடன் காதலில் விழுகிறார் நாயகன். இந்நிலையில், விஜய் சேதுபதியின் தங்கைக்கு திருமணம் நடக்கிறது. திருமணத்திற்காக வந்த விஜய் சேதுபதியின் நண்பர்களுக்கும் வில்லனுக்கும் மோதல் ஏற்படுகிறது.

இதில் வில்லனை வெளுத்துக்கட்டுகிறார் விஜய் சேதுபதி.

இதனால் தனது தங்கையின் திருமணத்தை கூட பார்க்க முடியாமல் மறைந்து வாழ்கிறார். பின்னர் என்ன நடந்தது? அவர் எப்படி டி.எஸ்.பி ஆனார்? என்பதே படத்தின் மீதி கதை. விஜய் சேதுபதி வழக்கமான தன் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். படத்தில் நாயகியான அணு கீர்த்தியின் நடிப்பு ஓகே ரகம் தான். இளவரசு, பிரபாகரன் ஆகியோர் தங்கள் எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். கதையும் திரைக்கதையும் வலுவாக அமைந்திருந்தால் டிஎஸ்பி பட்டையை கிளப்பி இருப்பார். இந்நிலையில் இப்படத்தின் வெற்றிவிழா சமீபத்தில் கொண்டாடப்பட்டது.

## அம்பேத்கரின் 66-வது நினைவு நாள்: அலங்காநல்லூர் அருகே பெரிய ஊர்சேரியில் உள்ள சிலைக்கு தி.மு.க. சார்பில் மாலை அணிவிப்பு



**அலங்காநல்லூர் - டிச- 7-**

சட்ட மாமேதை அம்பேத்கரின் 66 வது நினைவு நாளை முன்னிட்டு அலங்காநல்லூர் அருகே பெரிய ஊர்சேரியில் உள்ள அவரது சிலைக்கு சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தலைமையில் திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர் இதில் ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ் பரந்தாமன் பேரூர் செயலாளர்கள் ரகுபதி மனோகரவேல் பாண்டி வழக்கறிஞர் சத்யபிரகாஷ் அலங்காநல்லூர்பேரூரராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ் பாலமேடு பேருராட்சி சேர்மன் சுமதிபாண்டியன் மாணவரணி பிரதாப் மற்றும் அலங்காநல்லூர் பாலமேடு வாடிப்பட்டி சோழவந்தான் ஆகிய பகுதிகளை சேர்ந்த. ஒன்றிய கழக பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர் இதனை தொடர்ந்து விடுதலை சிறுத்தைகள் சார்பக சிந்தனை வளவன் தலைமையில் அக்கட்சியினர் அம்பேத்கர் சிலைக்கு மலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் அதிவீரபாண்டியன்.பாலவளவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அம்பேத்கரின் 66-வது நினைவு தினம்: திருமங்கலத்தில் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மணிமாறன் தலைமையில் தி.மு.க.வினர் மரியாதை



**திருமங்கலம்.டிச.07.**

சட்டமேதை அண்ணல் அம்பேத்கரின் 66வது நினைவு தினத்தை முன்னிட்டு திருமங்கலம் நகரில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் தி.மு.க நிர்வாகிகளும் தொண்டர்களும் அம்பேத்கரின் திருவுருவப் படத்திற்கு மலர்களை தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தினை உருவாக்கிய சட்டமேதை அண்ணல் அம்பேத்கரின் 66வது நினைவு தினம் நேற்று நாடு முழுவதிலும் சிறப்புடன் அனுசரிக்கப்பட்டது.இதன் ஒருபகுதியாக திருமங்கலம் நகரிலுள்ள மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் அண்ணல் அம்பேத்கரின் 66வது நினைவுதினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் மலரஞ்சலி செலுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் கலந்து கொண்டு தலைமையேற்று அண்ணல் அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு மாலையணிவித்தும் மலர்களை தூவியும் மரியாதை செலுத்தினார்.இதனை தொடர்ந்து கட்சி நிர்வாகிகளும் திரளான தொண்டர்களும் அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க அவைத்தலைவர் நாகராஜன், திருமங்கலம் நகரக் கழக செயலாளர் மு.சி.சோ.பா.ஸ்ரீதர்,திருமங்கலம் நகர் மன்ற தலைவர் மு.ரம்யாமுத்துக்குமார்,நகர் மன்ற துணைத் தலைவர் அ.ஆதவன் அதியமான்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதன்குமார்,மதுரை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பாசபிரபு,நகர் இளைஞரணி முத்துக்குமார், நகர் மன்ற கவுன்சிலர்கள் திருக்குமார்,வீரக்குமார்,சின்னச்சாமி,சரண்யாரவி உள்ளிட்ட தி.மு.க நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்நி நிர்வாகிகள் செல்வம்,ரவி, ஆசாத்(எ)சேட்,சித்தநாதன்,சீனிவாசன்,ஞானசேகரன்,ஆதிமூலம், சேட், முத்து, ரஞ்சித், தங்கப்பாண்டி,வக்கீல்கவிஸ்ரீ தினேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கார்த்திகை தீப திருநாளை முன்னிட்டு பசுமைஉலகம் வி.ப.ஜெயபிரதீப் சிவசாதுக்களுக்கு உடை, அன்னதானம்



**தேனி டிச 7**

தேனி மாவட்டம், பெரியகுளம் பெரியநாயகி உடனுறை மலைமேல் கைலாசநாதர் திருக்கோவில் கார்த்திகை தீப திருநாள் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இத்திருநாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் பசுமைஉலகம் வி.ப.ஜெயபிரதீப் சிவசாதுக்களுக்கு உடை, போர்வைகள் அடங்கிய தொகுப்பு மற்றும் அன்னதானம் வழங்கி வருகிறார். இந்தாண்டும் இத்திருநாளை முன்னிட்டு நேற்று மலை அடிவாரத்தில் 500க்கும் மேற்பட்ட சிவசாதுக்களுக்கு உடை, போர்வைகள் அடங்கிய தொகுப்பு மற்றும் அன்னதானத்தை வழங்கினார். அதனை பெற்ற சாதுக்கள் வி.ப.ஜெயபிரதீப்பை வாழ்த்தினர்.

இந்நிகழ்ச்சியில் தேனி ஒன்றிய செயலாளர் முத்துபாலாஜி, கோவை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் ராஜகோபால் மற்றும் நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## ராஜபாளையத்தில் மாணவர்கள் உடல் முழுவதும் யோகா நிலையில் விளக்கேற்றி சாதனை

**ராஜபாளையம், டிச. 07-**

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் பதஞ்சலி யோகா மையம் சார்பில் மாணவ, மாணவியர்களுக்கு யோகாசனம் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த மையத்தின் சார்பில் திருக்கார்த்திகை திருநாளை முன்னிட்டு பள்ளி மாணவர்களின் யோகாசனம் செய்த நிலையில் உடல் முழுவதும் தீபங்களை ஏற்றி யோகாசனம் செய்தனர்.

சின்மயா வித்யாலயா பள்ளியை சேர்ந்த 3ம் வகுப்பு மாணவன் ராகவ், 8ம் வகுப்பு மாணவன் சஞ்சனா, 7ம் வகுப்பு மாணவன் நரேஷ், அருணா பிரைமரி ஸ்கூல் 5ம் வகுப்பு மாணவன் இசக்கி முத்துப்பாண்டி ஆகியோர் இந்த விளக்கு ஏற்றி வைத்து சாதனையை நடத்தினார்கள்.

வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் இலவகுசன், ஆப் டெக் முத்துவேல், வழக்கறிஞர் வேல்முருகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்தினார்கள். ஆசிரியர் சரவணன் வரவேற்று பேசினார் முடிவில் பதஞ்சலி யோகா மைய பயிற்சியாளர் யோகா மாஸ்டர் பி. நீராத்திலிங்கம் நன்றி கூறினார்

# தி.மலையில் கார்த்திகை தீபத்திருவிழா கோலாகலம்: 2668 அடி மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட்டது: 40 லட்சம் பக்தர்கள் தரிசனம்

திருவண்ணாமலை டிச.7-

திருவண்ணாமலையில் பிரசித்தி பெற்ற மகாதீப பெருவிழாவையட்டி நேற்று அதிகாலை கோவில் வளாகத்தில் பரணி தீபம் ஏற்றப்பட்டது. மாலை 6 மணியளவில் கோவில் பின்புறமுள்ள 2668 அடி மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட்டது. இதில் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

நினைத்தாலே முக்தி தரும் திருத்தலம் அக்னி தலம் என உலகெங்கும் உள்ள பக்தர்களிடையே புகழ்பெற்று விளங்குவது திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோவில் இக்கோவிலில் ஆண்டுதோறும் பிரசித்தி பெற்ற கார்த்திகைதீபத்திருவிழா கொண்டாடப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டு தீபவிழா கடந்த 27ந்தேதி கொடி யேற் றத் து டன் தொடங்கியது. தினமும் காலையிலும் இரவிலும் பஞ்சமூர்த்திகள் மாடவீதிகளில் பவனிவந்தனர். முக்கிய நிகழ்வுகளன வெள்ளிதேரோட்டம் கடந்த 2ந் தேதியும் மகாதேரோட்டம் 3ந்தேதியும் விமர்சையாக நடந்தது. இதனைத் தொடர்ந்து தீபதிருவிழா உச்சவத்தின் 10ம் நாளான நேற்று மகாதீப பெருவிழா கோலாகலமாக நடைபெற்றது. கொரோனா கட்டுப்பாடுகளால் கடந்த 2 ஆண்டு களாக தீபத்திருவிழாவில் பக்தர்கள் பங்கேற்க அனுமதியில்லாத நிலை இருந்தது எனவே இந்த ஆண்டு கூடுதல் உச்சவத்துடன் தீபத்திருவிழா வெகுவிமர்சையாக நடைபெற்றது. இதனால் கார்த்திகை தீபத்தை தரிசிக்க தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் திருவண்ணாமலையில் குவிந்தனர். இந்நிலையில் அண்ணாமலையார் கோவில் கருவறை முன்பு நேற்று அதிகாலை 4 மணிக்கு பரணி தீபம் ஏற்றப்பட்டது. 'ஏகன் அநேகன்' எனும் தத்துவத்தை உணர்த்தும் வகையில் இந்த தீபம் ஏற்றப்பட்டது. வேதமந்திரங்கள் முழங்க சிவாச்சாரியார்கள் பரணி தீபத்தை ஏற்றினர். அப்போது கோவில் முழுவதும் விடிய விடிய காத்திருந்த பக்தர்கள் அண்ணாமலையாருக்கு அரோகரா என பக்தி முழக்கமிட்டு பரணி தீபத்தை தரிசனம் செய்தனர். முன்னதாக பரணி தீபத்தையட்டி கோவிலுக்குள் அதிகாலை 2 மணிமுதல் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். கோவில் வளாகத்திற்குள் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. பரணி தீபத்தைக் காண ஏற்கனவே டிக்கெட் பெற்றிருந்த பக்தர்கள் மட்டுமே கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சியில் தமிழக இந்து சமயநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மாவட்ட ஆட்சியர் பா.முருகேஷ் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன் இந்து அறநிலையத்துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் கூடுதல் ஆணையர் இரா.கண்ணன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மகாதேவன் ஏடிஜிபி சங்கர் வடக்கு மண்டல ஐஜி கண்ணன் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கார்த்திகேயன் மாநில மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன் நகர மன்ற தலைவர் நிர்மலா வேல்மாறன் முன்னாள் நகர மன்ற தலைவர் இரா.ஸ்ரீதரன் கோவில் இணை ஆணையர் கே.பி.அசோக்குமார் உதவி ஆணையர் ஜோதிலட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர். தீபத்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான மகாதீபம் கோவில் பின்புறமுள்ள மலை உச்சியில் நேற்று மாலை ஏற்றப்பட்டது. முன்னதாக அண்ணாமலையார் கோவில் 3ம் பிரகாரத்தில் உள்ள தீபதரிசன மண்டபத்தில் மாலை 5 மணியளவில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளிய நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 5.59



மணிக்கு கோவில் கொடிமரம் முன்பு ஆனந்த தாண்டவத்தடன் அர்த்தநாரீஸ்வரர் எழுந்தருளி காட்சியளித்தார் அப்போது கொடிமரம் முன்பு அகண்டத்தில் தீபம் ஏற்றியதும் சரியாக மாலை 6 மணிக்கு கோவில் பின்புறமுள்ள 2668 அடி உயரமுள்ள மலை உச்சியல் அண்ணாமலையாரின் ஜோதி வடிவமான மகாதீபம் ஏற்றப்பட்டது. அப்போது திருவண்ணாமலை நகரில் குவிந்திருந்த பக்தர்கள் அண்ணாமலையாருக்கு அரோகரா என பக்தி முழக்கமிட்டு மகாதீப தரிசனம் செய்தனர். இதில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்பட அரசு உயர்அதிகாரிகள் நீதிபதிகள் ஆன்மீக பிரமுகர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அப்போது திருவண்ணாமலை நகரமே விழாக்கோலம் பூண்டது வீடுகள் தோறும் அகல்விளக்குகள் ஏற்றப்பட்டதோடு வானதிர பட்டாசுகள் வெடித்து பக்தர்கள் அண்ணாமலையாருக்கு வழிபாடு செய்து தரிசனம் செய்தனர். இதேபோல திருவண்ணாமலை மற்றும் சுற்றுப்புற பகுதியிலுள்ள கிராமங்களில் மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட்ட பிறகே தங்களது வீடுகளில் அகல்விளக்கேற்றி தீபவழிபாடு செய்து சுவாமி தரிசனம் செய்தனர். இந்த மகா தீப தரிசனத்தில் கலந்து கொண்ட 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் 14 கி.மீ. தூரமுள்ள கிரிவலபாதையில் அஷ்டலிங்கங்களையும் வழிபட்டதோடு திருநேர் அண்ணாமலை அடிஅண்ணாமலை ஆகிய சன்னதிகளுக்கு சென்றும் சுவாமி தரிசனம் செய்தனர். இதையட்டி கிரிவலப்பாதை மற்றும் கோவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆன்மீக அமைப்புகள் சார்பில் அன்னதானமும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த விழாவையட்டி வடக்கு மண்டல ஐஜி கணணன் தலைமையில் 5 டிஐஜிகள் 32 எஸ்பிகள் உள்பட 13 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மலையேறும் பக்தர்களுக்காக 180 சிறப்பு அதிரடி படை வீரர்கள் (எஸ்டிஎப்) பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். காணாமல் போன குழந்தைகளை கண்டறியும் கூட்ட நெரிசலில் திருட்டு செயின் பறிப்பு போன்றவற்றில் ஈடுபடும் குற்றவாளிகளை கண்காணிக்கவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. மேலும் குற்றவாளிகள் நடமாட்டத்தை காவல்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். தீபத்திருவிழாவையட்டி பக்தர்களின் வசதிக்காக வரும் 8ந் தேதி வரை 2700 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டதோடு 63 சிறப்பு ரயில்களும் இயக்கப்படுகிறது. 13 இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தது. கார் வேன் போன்றவைகள் நிறுத்த 59 இடங்களில் சிறப்பு ஏற்பாடுகள செய்யப்பட்டிருந்தது. இன்று 7ந்தேதி காலை 8.14 மணிக்கு பவுர்ணமி தொடங்கி நாளை 8ந் தேதி காலை 9.22மணிக்கு நிறைவடைகிறது. மகாதீபதிருவிழா முடிந்தபிறகு லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மாவட்ட நிர்வாகம், நகராட்சி மற்றும் ஊராட்சி சார்பில் குடிநீர் கழிப்பிடம் சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளும் மாவட்ட ஆட்சியர் பா.முருகேஷ் உத்தரவின்பேரில் அதிகாரிகள் சிறப்பான ஏற்பாடுகள் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் விழாவின் நிறைவாக 3 நாட்கள் ஐயங்குளத்தில் தெப்பல் உற்சவத்தில் நடைபெறுவது தீபத்திருவிழாவின் சிறப்பாகும் அதன்படி இன்று 7ந் தேதி முதல் வரும் 9ந் தேதி வரை ஐயங்குளத்தில் தெப்பல் உற்சவம் நடைபெறும் முதல் நாள் இரவு 9 மணியளவில் சந்திரசேகரர் தெப்பலில் பவனிவந்து அருள்பாலிப்பார் 2ம் நாள் 8ந் தேதி இரவு 9 மணியளவில் பராசக்தி அம்மன் தெப்பல் பவனியும் 3ம் நாள் 9ம் தேதி இரவு சுப்பிரமணியர் தெப்பல் பவனியும் நடைபெறும் கடந்த 2 ஆண்டுகளுக்கு பிறகு தெப்பல் உற்சவம் ஐயங்குளத்தில் நடைபெறுவதால் தேவையான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது.

### 11 நாட்கள் பிரகாசிக்கும் தீபம்

தீபம் ஏற்றுவதற்கான நெய்திரி கற்பூரம் ஆகியவை நேற்று அதிகாலை மலைக்கு கொண்டு செல்லப்பட்டு மாலை 6 மணியளவில் மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட்டது. தொடர்ந்து மகாதீபம் 11 நாட்கள் காட்சியளிக்கஉள்ளது. மகாதீபம் ஏற்றப்படும் மலைமீது செல்ல பக்தர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது. அதிகபட்சம் 2500 பக்தர்களுக்கு மட்டும் புகைப்படத்துடன் கூடிய அனுமதி அட்டை வைத்திருந்தவர்கள் மலையேற அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



போளூர் பேருந்து நிலையம் அரசு பேருந்து பணிமணை வசூர் ஊராட்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற ஜெயலலிதா 6ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சியில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அதிமுக செயலாளரும் தொகுதி எம்.எல்.ஏ வுமான அக்ரி கிருஷ்ணமூர்த்தி கலந்துக்கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தி அன்னதானம் வழங்கினார். உடன் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.



செங்கம் ஒன்றியம் காயம்பட்டு கிராமத்தில் தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமை சங்கம் சார்பில் நடைபெற்ற உலக மாற்றுதிறனாளிகள் தின பேரணியை தாசில்தார் முனுசாமி கொடியசைத்து துவக்கிவைத்து மரக்கன்றுகள் வழங்கினார். உடன் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் உள்ளனர்.



கலசப்பாக்கத்தில் ஜெயலலிதாவின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி முன்னாள் எம்.எல்.ஏ பன்னீர்செல்வம் மலர் தூவி அஞ்சலி செலுத்தி அன்னதானம் வழங்கினார். உடன் ஒன்றிய அதிமுக செயலாளர் பொய்யாமொழி வக்கீல் ரமேஷ் மூர்த்தி நகர செயலாளர் வக்கீல் ராதா கூட்டுறவு வங்கி தலைவர் மண்ணு முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் ஜெயராமன் ஒன்றிய கவுன்சிலர் மலர் பழனி ஊராட்சி மன்ற தலைவர்கள் தரணி பாண்டியன் செல்வராஜ் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.


தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

# மின்வாரிய எம்ப்ளாய்ஸ் சங்கத்தினர் அம்பேத்கர் படத்திற்கு மரியாதை



அரக்கோணம் டிச 7

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் நகரம் விண்டர் பேட்டை மின் வாரியம் அலுவலகத்தில். வேலூர் வட்டம், தமிழ்நாடு மின்சார வாரிய டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாய்ஸ் யூனியனின் ,அரக்கோணம் கோட்டத்தின் சார்பில் பாபா சாகிப் அண்ணல் அம்பேத்கரின் 66வது நினைவு தினம் அனுஷ்டிக்கபட்டது. இதனை முன்னிட்டு கோட்ட செயற்பொறியாளர் (பொறுப்பு) குமரேசன் தலைமையில். கோட்ட உதவி செயற் பொறியாளர் புனிதா முன்னிலையில், வேலூர் திட்ட செயலாளர் சு. கிருபாகரன் அம்பேத்கர் உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அப்போது உதவி செயற் பொறியாளர்கள் அனுராதா, குமரன், புகழேந்தி உட்பட உதவி பொறியாளர்கள், சங்க உறுப்பினர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் என திரளானவர்களும் கலந்து கொண்டு அன்னாருக்கு மரியாதை செலுத்தினர். இறுதியில் தக்கோலம் உதவி பொறியாளர் அனு அனைவருக்கும் நன்றி கூறினார்.



புதுச்சேரி உழவர்கரை புது நகர் பகுதியில் அதிமுக தொகுதி செயலாளர்பொன்னுசாமிதலைமையில்ஜெயலலிதாநினைவு தினத்தையொட்டி உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# செங்கம் வட்டார வளமையத்தில் கலைத்திருவிழா



செங்கம் டிச.7

செங்கம் அனைவருக்கும் கல்வி வட்டார வளமையத்தில் கலைத்திருவிழா நிறைவு மற்றும் பரிசளிப்பு விழா நடந்தது. 6முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு வட்டார வளமைய மேற்பாற்வையாளர் முருகன் தலைமை தாங்கினார். மாவட்ட கல்வி அலுவலர்கள் காளிதாஸ் கார்த்திகேயன் முன்னிலை வகித்தனர். வட்டார கல்வி அலுவலர் உதயகுமார் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டு செங்கம் தொகுதி எம்.எல்.ஏ மு.பெ.கிரி மாணவர்களுக்கு பரிசளித்து பேசினார். பேரூராட்சி தலைவர் சாதிக்பாஷா தாலுக்கா கூட்டுறவு சங்க தலைவர் முருகன் பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் ரேவதி முருகமணி துணைதலைவர் பல்கேஸ் அப்துல்வாஹித் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

முடிவில் வட்டார கல்வி அலுவலர் ஷகிலா நன்றி கூறினார். தலைமை ஆசிரியர் ஜி.கிருஷ்ணன் நிகழ்சியை தொகுத்து வழங்கினார். மாணவர்கள் கலை நிகழ்ச்சி நடந்தது. பரிசளிக்கப்பட்டது.

# தி.மலையில் இந்து அறநிலையத்துறை சார்பில் ஆன்மீக புத்தக நிலையம்

## அமைச்சர் பி.கே.சேகர் பாபு திறந்து வைத்தார்



திருவண்ணாமலை டிச.7-

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்திருவிழாவின் முக்கிய நிகழ்வான மகாதீபத்தையட்டி இந்து அறநிலையத்துறை சார்பில் ஆன்மீக புத்தக நிலையத்தை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று திறந்துவைத்தார்.

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 27ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்றுவருகிறது. முக்கிய விழாவான நேற்று கோவிலில் விடியற்காலை 4 மணியளவில் பரணி தீபம் ஏற்றப்பட்டது மாலை 6 மணியளவில் 2668 அடி உயர மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட்டது. இதில் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இந்நிலையில் திருவண்ணாமலை கிரிவலப் பாதை குபேர லிங்கம் அருகில் பிரசாத விற்பனை நிலையம் மற்றும் ஆனமீக புத்தக நிலையம் திறப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவுக்கு சுற்றுலாபண்பாடு மற்றும் அறநிலையத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பிரசாத விற்பனை நிலையம் மற்றும் ஆன்மீக புத்தக நிலையத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி விற்பனையை துவக்கி வைத்து பார்வையிட்டார். இதில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் கூடுதல் ஆணையர் இரா.கண்ணன் துணை ஆணையர் ஹரிஹரன் அண்ணாமலையார் கோவில் இணை ஆணையர் கே.பி.அசோக்குமார், உதவி ஆணையர் ஜோதிலட்சுமி இணை ஆணையர் (நாகப்பட்டினம்) க.ராமு உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆரணியில் அம்பேத்கர் நினைவு தினம் அனுசரிப்பு



ஆரணி டிச7:

ஆரணியில் அனைத்து கட்சி சார்பில் அம்பேத்கார் நினைவு தினம் அனுசரித்தனர்.

அம்பேத்கரின் 66வது ஆண்டு நினைவு தினம் முன்னிட்டு திமுக சார்பில் நகர மன்ற தலைவர் ஏ.சி.மணி தலைமையில் அம்பேத்கார் சிலைக்கு மாலை அணிவித்தார் நிகழ்ச்சியில் முன்னாள் எம்எல்ஏ ஆர்.சிவானந்தம்,

அதிமுக சார்பில் சேவூர் எஸ்.இராமச்சந்திரன் எம்எல்ஏ அம்பேத்கார் சிலைக்கு மாலை அணிவித்து படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் அ.கோவிந்தராசன், நகர செயலாளர் எ.அசோக்குமார், மாவட்ட ஆவின் தலைவர் பாரி பி.பாபு, ஒன்றிய செயலாளர்கள் வக்கீல் க.சங்கர், ஜி.வி.கஜேந்திரன், நகரமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.மோகன், ரம்யாகுமரன், விநாயகம், பாரதி ராஜா, சதீஷ், சிவக்குமார், நடராஜன், முன்னாள் நகரமன்ற துணைததலைவர் ஏ.ஜி.ஆனந்தன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**காங்கிரஸ்:**

காங்கிரஸ் கட்சி சார்பில் நகரமன்ற உறுப்பினர் ஜெயவேலு தலைமையில் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். நிகழச்சியில் நிர்வாகிகள் அருணகிரி, பிரசாத், முருகன், தெள்ளூர் சேகர், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# வேலூரில் நடைபெற்ற அகாடமி கோப்பை கிரிக்கெட்: சென்னை அணி வெற்றி

வேலூர் டிச.7

வேலூரில் நேற்று துவங்கிய 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான அகாடமி கோப்பை கிரிக்கெட் போட்டியின் துவக்க ஆட்டத்தில் சென்னையைச் சேர்ந்த ஈ.ஆர்.எஸ். எலைட் அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வி.ஏ.சி. வேலூர் அணியை தோற்கடித்தது. வேலூர் மாவட்டம் காலாம்பட்டில் உள்ள வி.சி.ஜி. டிரஸ்ட் சார்பில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான 30 ஓவர் கிரிக்கெட்டி போட்டி நடைபெறுகிறது. சென்னை, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 8 அணிகள் 2 பிரிவுகளாக இப்போட்டியில் விளையாடுகின்றன. நேற்று காலை துவங்கிய போட்டிகளை வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க பொருளாலர் விக்னேஷ்வரன் துவக்கி வைத்தார். வி.சி.ஜி. டிரஸ்ட் தலைவர் சுதாகர் தலைமை தாங்கினார்.

துவக்க ஆட்டத்தில் வேலூரைச் சேர்ந்த வி.ஏ.சி. அணியும், சென்னையைச் சேர்ந்த ஈ.ஆர்.எஸ். எலைட் அணியும் மோதின. முதலில் விளையாடிய வேலூர் அணி 26.5 ஓவர்களில் 99 ரன்களில் ஆல்அவுட்டானது.

இந்த அணிக்கு ஆதித்யா, நிதிஷ் ஆகிய இருவரும் தலா 30 ரன்கள் பெற்றுத்தந்தனர். அடுத்து 100 ரன்கள் இலக்குடன் களம் இறங்கிய ஈ.ஆர்.எஸ். அணி 18.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இந்த அணிக்கு மன்னன் 31 ரன்கள் பெற்றுத்தந்தார். இந்த அணியின் கேப்டனான இவர் ஆட்டநாயகன் விருதையும் பெற்றார்.

மாண்புமிகு வருவாய்
கோட்டாச்சியர், அவர்கள்,
அரக்கோணம்
T.செல்வம் த/பெ தக்காளி,
நெ. 48.பஜனை கோவில் தெரு,
மாங்காட்டுச்சேரி கிராமம்,
அரக்கோணம் வட்டம்,
ராணிபேட்டை மாவட்டம்
........மனுதாரர்
.....எதிர்....
உயர் திரு கோட்டாச்சியர்
அவர்கள், கோட்டாச்சியர்
அலுவலகம், அரக்கோணம்,
......எதிர்மனுதாரர்
மேலே கண்ட முகவரியில் வசிக்கும் நான் எனது பெரியம்மா சின்ன குழந்தையம்மாள் க/பெ கொள்ளாபுரி இவர் கடந்த 18-01-2000 தேதியன்று மேலே கண்ட முகவரியில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் குடும்பத்தாரின் கவனக் குறைவால் எதிர்மனுதாரரிடம் பதிவு செய்ய தவறி விட்டனர். எனவே. எனது பெரியம்மா சின்ன குழந்தையம்மாள் இறப்பை எதிர்மனுதாரர் பதிவு செய்ய உத்தரவு கோரி மனு தாக்கல் செய்கிறேன். எனவே, யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மாண்புமிகு வருவாய் கோட்டாச்சியர் அரக்கோணம் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்து கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கபட்டு உத்தரவு பெறப்படும் என்பதை அறியவும்
இப்படிக்கு T.செல்வம்,
மாங்காட்டுச்சேரி.

மாண்புமிகு வருவாய்
கோட்டாச்சியர், அவர்கள்,
அரக்கோணம்
T.செல்வம் த/பெ தக்காளி,
நெ. 48.பஜனை கோவில் தெரு,
மாங்காட்டுச்சேரி கிராமம்,
அரக்கோணம் வட்டம்,
ராணிபேட்டை மாவட்டம்
........மனுதாரர்
.....எதிர்....
உயர் திரு கோட்டாச்சியர்
அவர்கள், கோட்டாச்சியர்
அலுவலகம், அரக்கோணம்,
......எதிர்மனுதாரர்
மேலே கண்ட முகவரியில் வசிக்கும் நான் எனது தந்தை தக்காளி த/பெ வேலன் இவர் கடந்த 16-05-2010 தேதியன்று மேலே கண்ட முகவரியில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் குடும்பத்தாரின் கவனக் குறைவால் எதிர்மனுதாரரிடம் பதிவு செய்ய தவறி விட்டனர். எனவே. எனது தந்தை தக்காளி இறப்பை எதிர்மனுதாரர் பதிவு செய்ய உத்தரவு கோரி மனு தாக்கல் செய்கிறேன். எனவே, யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மாண்புமிகு வருவாய் கோட்டாச்சியர் அரக்கோணம் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்து கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கபட்டு உத்தரவு பெறப்படும் என்பதை அறியவும்
இப்படிக்கு T.செல்வம்,
மாங்காட்டுச்சேரி

# திருவொற்றியூர் சாதனை மாணவிக்கு புதுவை முதல்வர் என்.ரங்கசாமி பாராட்டு



**திருவொற்றியூர். டிச. 07**

சென்னை திருவொற்றியூரை சேர்ந்த எட்டாம் வகுப்பு பள்ளி மாணவி சுபிக்ஷா (வயது.12)

**பாராட்டு**

இவர் 98 க்கும் மேற்பட்ட நாடுகளின் மொழிகளில் 196 தேசிய கீதங்கள் மற்றும் சுப்ரபாதம் உள்ளிட்ட பாடல்களை மனப்பாடமாகவும் சரளமாக பாடும் திறமை கொண்ட மாணவி சுபிக்ஷா. கின்னஸ் உலக சாதனைக்கு தயாராக இருக்கும் மாணவியை புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி புதுவை சட்ட மன்ற அலுவலகத்திற்கு நேரில் அழைத்து மாணவியின் திறமைகளை கேட்டு வியந்து இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா, கனடா, பிரெஞ்சு, ஆகிய மொழிகளில் தேசிய கீதங்களை பாட வைத்து மாணவியை பாராட்டி சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

மேலும் மென்மேலும் தனது தனித் திறமையில் வளர்ச்சி பெற மாணவிக்கு பாராட்டுகளை தெரிவித்தார் இவர்களுடன் மாணவியின் பெற்றோர்கள் சி.வி.ஹேம்நாத் எச்.மோகனா, சி.வி.நிஷோக் ஆகியோரையும் திருவொற்றியூர் ஸ்ரீசங்கர வித்யா கேந்திரா பள்ளி ஆசிரியர்களையும் பாராட்டினார்,

# சென்னையில் மேயர் ஆர்.பிரியாவுடன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சான் ஆன்டோனியோ மாநகரத்தின் மேயர் ரான் நிரன்பர்க் தலைமையிலான குழுவினர் சகோதரத்துவ நகரத்தின் இணைப்பு ஒப்பந்தப்படி செயல்படுவது குறித்து ஆலோசனை





**சென்னை,டிச.07**

சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியாவுடன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சான் ஆன்டோனியோ மாநகரத்தின் மாண்புமிகு மேயர் திரு.ரான் நிரன்பர்க் அவர்கள் தலைமையிலான குழுவினர் சகோதரத்துவ நகரங்களின் இணைப்பு ஒப்பந்தங்களின் படி, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அமெரிக்க நாட்டின் சான் ஆன்டோனியோ நகரம் ஆகியவை இணைந்து செயல்படுவது குறித்த கலந்துரையாடல் கூட்டம் ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் (06.12.2022) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சான் ஆன்டோனியோ மாநகரத்தின் மேயர்.ரான் நிரன்பர்க் மற்றும் அவரது குழுவினருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக நினைவுப் பரிசினை வழங்கி சிறப்பித்தார்.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டமைப்பு, திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலாளர் /ஆணையாளர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சான் ஆன்டோனியோ மாநகரம் ஆகியவை சகோரத்துவ நகரங்களின் இணைப்பாக இரு மாநகர மக்களது ஆக்கப்பூர்வ உறவுகளை மேம்படுத்துவதுடன், கல்வி, சுகாதாரம், அடிப்படை கட்டமைப்பு குறித்து இரு மாநகரங்களும் தங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையிலும், இரு மாநகர மக்களின் பண்பு, அறிவுத்திறம், பொருளாதாரம் ஆகியவைகளை மேலும் வளப்படுத்தும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்களும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் சான் ஆன்டோனியோ நகரத்தின் மாண்புமிகு மேயர் அவர்களும் ஒத்துழைப்பு நல்கி செயல்படுவோம் எனத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, மாமன்றக் கூட்டரங்கினை அமெரிக்க ஐக்கிய நாட்டின் சான் ஆன்டோனியோ நகரத்தின் மாண்புமிகு மேயர் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர். மன்றக் கூட்டத்தின் செயல்பாடுகள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் அவர்கள் எடுத்துரைத்தார்.

**கலந்து கொண்டோர்**

இந்நிகழ்வில், துணை மேயர்.மு.மகேஷ்குமார் அவர்கள், முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, சான் ஆன்டோனியோ நகர முன்னாள் மேயர் திரு.பில் ஹார்டுபெர்கர் அவர்கள், அமெரிக்க துணைத் தூதரகத்தின் துணை தூதர் ஜுடித் ரவின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (கணக்கு) .க.தனசேகரன் மற்றும் துணை ஆணையாளர்கள், வட்டார துணை ஆணையாளர்கள், சான் ஆன்டோனியோ நகரத்தின் குழுவினர் கலந்து கொண்டனர்.



ஜெயலலிதா ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் உத்தரவின் பேரில் தேரடி சன்னதி தெருவில் முன்னாள் கவுன்சிலரும் கிழக்குபகுதி செயலாளருமான தேரடி கே.பரமசிவம் ஏற்பாட்டில் எம்ஜிஆர் ஜெயலலிதா உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு மாவட்ட செயலாளர் கே.கிருஷ்ணன் அன்னதானம் வழங்கினார். அருகில் மேற்கு பகுதி செயலாளர் எம்.சி.சூர்யா உள்ளார்.



அம்பேத்கர் 66வது நினைவு நாளையொட்டி மதுரவாயல் சட்டமன்ற தொகுதி வளசரவாக்கத்தில் அவரது திருவுருவ சிலைக்கு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.உடன் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன்,பொதுக் குழு உறுப்பினர் வ.செல்வகுமார் எம்.சி, பகுதி அவைத் தலைவர் செல்வராஜ், பகுதி துணை செயலாளர்கள் வே.மதியழகன், பாரதிஎம்.சி, வட்ட செயலாளர்கள் எஸ்.அப்பன்(எ)சத்தியமூர்த்தி,எஸ்.ரமேஷ்ராஜ், சி.சுந்தர், செல்வி ரமேஷ் எம்.சி உள்ளனர்.



வளசரவாக்கம் மண்டலம் 154 வது வார்டு சாந்தி நகரிலுள்ள இந்து மயான பூமியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து மாநகராட்சி அதிகாரிகளுடன் மாமன்ற உறுப்பினர் ராமாபுரம் வ.செல்வக்குமார் ஆய்வு செய்தார்.

# எல்லாபுரம் தெற்கு ஒன்றியத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் கொண்டாட்டம்



**ஊத்துக்கோட்டை, டிச-07.**

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் திருக்கண்டலம் ஊராட்சியில் திமுக மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அறுசுவை உணவான பிரியாணி உள்ளிட்ட நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் ஆலோசனைப்படி எல்லாபுரம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆ.சத்தியவேலு தலைமையில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சாம்கமலேசன், தினேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய அவைத்தலைவர் டி.கே.முனிவேலு, ஒன்றிய துணை செயலாளர்ப.ராஜேஸ்வரி பாஸ்கர், ஒன்றிய பொருளாளர் கே.எஸ்.எம்.குப்பன்,மாவட்ட பிரதிநிதி தணிகாசலம், ஊராட்சி மன்ற தலைவர் சத்யராஜ் என்கின்ற மதன், துணை தலைவர் லிங்கதுரை, கிளை கழக செயலாளர் தியாகராஜன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் 4-வது வார்டு கிளைச் செயலாளர் எஸ்.குப்புசாமி, எழில்ராஜ், எம்.விஜயகுமார், ஏசு, அருண்குமார், ராமு, ஆனந்தன், தண்டபாணி, இளைஞரணி சரண்ராஜ், உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கிரீன் நீடா அமைப்பு சார்பில் குறுங்காட்டில் நெல் ஜெயராமன் நினைவு தினம் அனுசரிப்பு

**சென்னை டிச.7**

கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பு சார்பில் நீடாமங்கலம் ரயில் நிலையம் அருகேயுள்ள கிரீன் நீடா குறுங்காட்டில் மறைந்த நெல் ஜெயராமன் 4-ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.


**நினைவு தினம்**

அவரது திருவுருவப்படத்திற்கு கிரீன் நீடா அமைப்பின் திருவாரூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.ஆர்.கே.ஜானகிராமன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பேசுகையில், இயற்கையையும், நம் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க கூடிய இயற்கை விவசாயத்தை இளையோர்கள் மத்தியில் கொண்டு சேர்த்தவர் நெல் ஜெயராமன். மறைந்து போன பாரம்பரிய நெல் ரகங்களை தேடிப்பிடித்து சேகரித்து பாதுகாத்து அதனை இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கி பன்மடங்காக பெருக்கி, டெல்டா மாவட்டத்தில் ஆண்டுதோறும் நெல் திருவிழா நடத்தியவர், அவர் விட்டுச்சென்ற இயற்கை சார்ந்த பணிகளை மாணவர்களும் பின்பற்றி நடந்து இயற்கையை காக்க வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் கிரீன் நீடா இணை ஒருங்கிணைப்பாளர் இராம.கந்தசாமி, அரசு உதவி பெறும் நீடாமங்கலம் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், சமூக ஆர்வலர் சதீஸ், அரசு உதவிபெறும் நீடாமங்கலம் மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் இயற்கை விவசாயத்தை பேணி காப்போம் என உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். நெல் ஜெயராமன் திருவுருவப்படத்திற்கு இயற்கை ஆர்வலர்கள், மாணவர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.



ஜெயலலிதா 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி 4 வது வட்டத்தில் ஜெயலலிதா திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திய பின் அன்னதானம் வழங்கப்பட்டது. வட்ட செயலாளர் எஸ்.சரவணன் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் பாலு, சுந்தரேசன், சசிதரன, ஆனந்தி, ராணி லட்சுமி ரேவதி ராசாத்தி, அனிதா கண்ணம்மா தனலட்சுமி கலந்து கொண்டனர்.

# திருத்தணி முருகன் கோயிலில் கார்த்திகை தீபம்: பக்தர்கள் பரவசம்



திருத்தணி.டிச.7

அறுபடை வீடுகளில் சிறந்து விளங்கி ஐந்தாம் படை என போற்றப்படும் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நேற்று மாலை கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது.

இதற்குண்டான விழா ஏற்பாடுகளை திருக்கோயில் நிர்வாகம் சிறப்பாக செய்திருந்தது விழாவை முன்னிட்டு மூலவர் கடவுளுக்கு சிறப்பு அபிஷேகம் நடத்தி தங்க கவசம் வைர கிரீடம் பச்சைக்கல் மரகத மாலை அணிவிக்கப்பட்டு தீபாரதனை நடைபெற்றது தொடர்ந்து பக்தர்கள் நேற்று கிருத்திகை நாள் என்பதால் ஏராளமானோர் மலைக் கோயிலில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர் மாலையில் வள்ளி தேவயானி சமேததராய் உற்சவர் மூர்த்தி கடவுள் அலங்கரிக்கப்பட்ட அன்ன வாகனத்தில் தேர் வீதியில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார் தொடர்ந்து தீபாரதனை முடிந்து அங்குள்ள சொக்கப்பனையில் அகல் விளக்கில் சிவாச்சாரியார்கள் தீபம் ஏற்றும் போது எதிரில் உள்ள பச்சரிசி மலையில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது.

அப்போது அங்கு கூடியிருந்த பக்தர்கள் மலைக்கோயில் தேர் வீதி முழுவதும் நெய் விளக்கு ஏற்றி முருகனை வழி பட்டனர் இந்த தீபம் மூன்று நாளைக்கு எரியும் இதை சுற்றுப்புற கிராம மக்கள் வீட்டில் இருந்தே கண்டு களிக்கலாம் கார்த்திகை தீபம் திருநாளில் நகரம் மற்றும் கிராமங்களில் வர்த்தக நிறுவனங்கள் வீடுகள் கோயில்கள் மண்டபங்களில் தீபம் ஏற்றி பக்தர்கள் வழிபட்டனர் விழாவை முன்னிட்டு திருக்கோயில் மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டு இருந்தன



ஜெயலலிதா 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் கிழக்கு பகுதி 12வது வட்டத்தில் ஜெயலலிதா திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திய பின் ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டது. வட்ட செயலாளர் காலடிப்பேட்டை எஸ்.முரளி ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் 5 கிலோ குட்கா பறிமுதல்: வாலிபர் கைது

**சென்னை டிச 7-**

சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் 5 கிலோ குட்கா வைத்திருந்த வாலிபரை போலீசார் கைது செய்தனர். சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் சசிகலா மற்றும் ரெயில்வே போலீசார் நேற்றுமுன் தினம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது காத்திருப்பு அறையில் சந்தேகப்படும் படியாக ஒருவர் அமர்ந்து இருப்பதை போலீசார் கண்டனர். அவர் வைத்திருந்த பையை சோதனை செய்ததில் அதில் 5 கிலோ குட்கா இருப்பது தெரியவந்தது. அவரை போலீஸ் நிலையம் அழைத்து சென்று விசாரணை செய்ததில் அவர் மத்தியபிரதேச மாநிலம் மத்தனபாடு பகுதியை சேர்ந்த தனராம் (வயது 28) என்பது தெரியவந்தது. அவரை கைது செய்த போலீசார், அவரிடமிருந்து பறிமுதல் செய்த குட்காவை போதைபொருள் தடுப்பு பிரிவிடம் ஒப்படைத்தனர்.



ஜெயலலிதாவின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி திருவேற்காடு 7 வது வார்டு அயனம்பாக்கத்தில்வட்ட செயலாளர் குமார் (எ) ராஜன் ஏற்பாட்டில் முன்னாள் அமைச்சர் பா.பென்ஜமின் ஜெயலலிதாவின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.உடன் நகரசெயலாளர்எஸ்.எஸ்.எஸ்.குமார், அவை தலைவர் ஏ.டி. சந்திரன், துணை செயலாளர் சிவா, மாவட்ட பிரதிநிதி பிரபு ராஜன் மற்றும் பலர் உள்ளனர்.

# புழலில் 3 கிலோ கஞ்சாவுடன் 3 பேர் கைது

**சென்னை டிச 7-**

பெரும்பாக்கம், புழலில் 3½ கிலோ கஞ்சாவுடன் 3 பேரை போலீசார் கைது செய்தனர். சென்னையை அடுத்த பெரும்பாக்கம் எழில் நகர் பகுதியில் பள்ளிகரணை மதுவிலக்கு அமலாக்க பிரிவு சிறப்பு போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகப்படும்படியாக நின்ற வாலிபரை பிடித்து சோதனை செய்தனர். அவரிடம் 1½ கிலோ கஞ்சாவை மறைத்து வைத்து இருந்ததை கண்டுபிடித்தனர். விசாரணையில் அவர், சென்னை பழைய திருமங்கலம் பெரியார் தெருவை சேர்ந்த தினேஷ்குமார் என்ற மேத்திவ் (வயது 29) என தெரிய வந்தது. அவரை கஞ்சாவுடன் பெரும்பாக்கம் போலீசில் ஒப்படைத்தனர். இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து தினேஷ்குமாரை கைது செய்தனர். அவரிடம் இருந்து கஞ்சா, செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. இதேபோல் புழல் சைக்கிள் ஷாப் பகுதியில் மாதவரம் மதுவிலக்கு போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக மோட்டார்சைக்கிளில் 2 கிலோ கஞ்சா கடத்தி வந்த செங்குன்றத்தை சேர்ந்த சரத்குமார்(23), குணா(22) ஆகியோரை கைது செய்தனர்.

# பெரம்பூரில் டிராவல்ஸ் அலுவலகத்தில் பணம் திருட்டு

**சென்னை டிச 7-**

பெரம்பூரில் டிராவல்ஸ் அலுவலகத்தில் பணம் திருடி சென்ற மர்மநபர்களை போலீசார் தேடிவருகின்றனர். சென்னை ஓட்டேரி சத்தியப்பன் தெருவை சேர்ந்தவர் ராஜேஷ். இவருடைய மனைவி திலகவதி (வயது 36). இவர், பெரம்பூர் பேப்பர் மில் சாலையில் உள்ள டிராவல்ஸ் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறார். நேற்று முன் தினம் காலை அலுவலகத்தை திறக்க வந்த திலகவதி, முன்பக்க பூட்டு உடைக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து செம்பியம் போலீஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்தார். போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினர். அதில் மர்மநபர்கள் டிராவல்ஸ் அலுவலகத்தின் பூட்டை உடைத்து ரூ.90 ஆயிரத்தை திருடிச்சென்று இருப்பது தெரிந்தது. மேலும் அருகில் இருந்த 2 கடைகளின் பூட்டை உடைத்து கொள்ளை முயற்சியில் ஈடுபட்டு இருப்பதும் தெரியவந்தது. இதுபற்றி செம்பியம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இன்று 2-வது ஒருநாள் போட்டி:
# வங்காளதேச அணிக்கு எதிராக வெற்றி நெருக்கடியில் இந்தியா



**மிர்பூர், டிச. 07-**

வங்கதேசத்திற்கு எதிராக இன்று நடைபெறும் 2-வது ஒருநாள் போட்டியில் வெற்றிப்பெற வேண்டிய கட்டாயத்தில் இந்திய அணி உள்ளது.

**2-வது போட்டி...**

இந்தியா-வங்காளதேச அணிகள் மோதும் 2-வது ஒரு நாள் போட்டி மிர்பூரில் இன்று (7-ந்தேதி) நடக்கிறது. இந்திய நேரப்படி காலை *11.30* மணிக்கு ஆட்டம் தொடங்குகிறது. இந்த ஆட்டம் இந்திய அணிக்கு மிகவும் முக்கியமானது. வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. தோற்றால் ஒரு நாள் தொடரை இழந்துவிடும். இதனால் இந்திய அணி வங்காளதேசத்துக்கு பதிலடி கொடுத்து தொடரை சமன் செய்யும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

**பேட்டிங் மோசம்...**

முதல் போட்டியில் பேட்டிங் மிகவும் மோசமாக இருந்தது. லோகேஷ் ராகுல் ஒருவரே நிலைத்து நின்று ஆடினார். அதுவும் கடைசிகட்ட வீரர்கள் ஒற்றை இலக்கத்திலேயே வெளியேறினார்கள். இதனால் பேட்டிங்கில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியமாகும். இதேபோல பீல்டிங் மிகவும் மோசமாக இருந்தது. லோகேஷ் ராகுல், வாஷிங்டன் சுந்தர் முக்கியமான கட்டத்தில் கேட்ச்சுகளை தவறவிட்டனர். இது அணியின் வெற்றியை பாதித்தது.

**அணியில் மாற்றம்...**

இன்றைய போட்டிக்கான அணியில் மாற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. லிட்டன் தாஸ் தலைமையிலான வங்காளதேச அணி இந்த ஆட்டத்திலும் வெற்றிபெற்று ஒருநாள் தொடரை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது. முதல் போட்டியில் பெற்ற வெற்றி அந்த அணிக்கு நம்பிக்கையை அதிகரித்துள்ளது. கேப்டன் லிட்டன் தாஸ், சகீப்-அல்-ஹசன், முஸ்பிகுர் ரகீம், ஹசன் மிராஸ், எபொதத் உசேன் போன்ற சிறந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர். வெற்றி நெருக்கடியான இந்த ஆட்டத்தில் இந்திய வீரர்கள் முழு திறமையை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

## இந்திய டெஸ்ட் அணியில் இடம்பிடிக்க
# ரஞ்சி கோப்பை மும்பை அணிக்காக களமிறங்குகிறார் சூர்யகுமார் யாதவ்

**மும்பை, டிச. 07-**

இந்திய டெஸ்ட் அணியில் இடம்பிடிக்க மும்பை ரஞ்சி அணியில் களமிறங்குகிறார் சூர்யகுமார் யாதவ்.



**77 ஆட்டங்களில்...**

*32* வயது சூர்யகுமார் யாதவ், நெ.*1* டி*20* பேட்டராக உள்ளார். இந்திய அணிக்காக *16* ஒருநாள், *42* ஒருநாள் ஆட்டங்களில் இதுவரை விளையாடியுள்ளார். *77* முதல்தர ஆட்டங்களில் விளையாடியுள்ள சூர்யகுமாரின் கனவு, இந்திய டெஸ்ட் அணியில் விளையாடுவது. இதற்காக *2022-23* ரஞ்சி கோப்பைப் போட்டியில் விளையாட முடிவெடுத்துள்ளார். இதையடுத்து ரஞ்சி கோப்பைப் போட்டிக்கான மும்பை அணியில் சூர்யகுமார் இடம் பெற்றுள்ளார்.

**2-வது ஆட்டத்தில்...**

வங்கதேசத்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஓய்வு காரணமாக சூர்யகுமார் இடம் பெறவில்லை. இதையடுத்து மும்பை ரஞ்சியில் அணியில் சேர்க்கப்பட்டுள்ள சூர்யகுமார், ஹைதராபாத்துக்கு எதிரான மும்பையின் 2-வது ஆட்டத்தில் பங்கேற்கவுள்ளார். கடந்த வருடம் இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடர்களில் இந்திய அணியில் இடம்பிடித்தார் சூர்யகுமார். எனினும் டெஸ்டில் விளையாட அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

## கடந்த 10 ஆண்டுகளில் சொந்த மண்ணில் நடந்த
# டெஸ்ட் போட்டியில் ஆதிக்கம் செலுத்தி வரும் இந்திய அணி

**சென்னை, டிச. 07-**

கடந்த *10* ஆண்டுகளில் சொந்த மண்ணில் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் சர்வதேச கிரிக்கெட் அணிகளின் வெற்றி விகிதம் குறித்த தரவு வெளியாகி உள்ளது. இதில், இந்திய அணி சொந்த மண்ணில் *80.95* சதவீத வெற்றி விகிதத்துடன் முன்னணியில் உள்ளது.

**காரசார விவாதம்...**

கிரிக்கெட் விளையாட்டின் அசல் வடிவம் என டெஸ்ட் கிரிக்கெட் போற்றப்பட்டு வருகிறது. ஒருநாள், டி*20* மற்றும் ப்ரான்சைஸ் கிரிக்கெட் வரவுகளால் டெஸ்ட் கிரிக்கெட்டின் எதிர்காலம் குறித்து காரசாரமாக முன்பு விவாதிக்கப்பட்டு வந்தது. ஆனால், ஐசிசியின் உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் அந்த விவாதங்களை தவிடு பொடியாக்கியது. அதே நேரத்தில் மற்ற வடிவ கிரிக்கெட்டுக்கு கிடைக்கும் அதே வரவேற்பை டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கும் ரசிகர்கள் கொடுத்து வருகின்றனர்.



**விராட் கோலி...**

கடந்த *2014* வாக்கில் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கேப்டன் ஆனார் விராட் கோலி. அவர் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சு யூனிட்டுக்கு வலு சேர்த்தது இந்த காலகட்டத்தில்தான்.

### வெற்றி விகிதம்

1) **வங்கதேசம் - 30.00%.**
2) **மேற்கிந்திய தீவுகள் - 40.00%.**
3) **பாகிஸ்தான் - 44.44%.**
4) **இலங்கை - 50.00%.**
5) **இங்கிலாந்து - 58.20%.**
6) **நியூஸிலாந்து - 63.41%.**
7) **தென் ஆப்பிரிக்கா - 66.66%**
8) **ஆஸ்திரேலியா - 70.83%.**
9) **இந்தியா - 80.95%.**

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# இந்திய மகளிர் கிரிக்கெட் அணி பேட்டிங் பயிற்சியாளர் நியமனம்

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் பேட்டிங் பயிற்சியாளராக முன்னாள் வீரர் ஹிருஷிகேஷ் கனிட்கர் நியமிக்கப்பட்டுள்ளார். டிசம்பர் *9* ஆம் தேதி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் இருந்து கனிட்கர் பேட்டிங் பயிற்சியாளராக பொறுப்பேற்கிறார்.

இந்தியாவுக்காக *2* டெஸ்ட் மற்றும் *34* ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். முதல் தர போட்டிகளில் *10* ஆயிரம் ரன்கள் இவர் குவித்திருக்கிறார். இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த முன்னாள் வீரர் ரமேஷ் பவாரை நேஷனல் கிரிக்கெட் அகாடெமிக்கு பிசிசிஐ மாற்றம் செய்துள்ளது

# வங்கதேச 'ஏ' அணிக்கு எதிராக முகேஷ் அபாரம்

இந்திய ஏ அணி வங்கதேசத்துக்குச் சுற்றுப்பயணம் செய்து இரு அதிகாரபூர்வமற்ற டெஸ்டுகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் டிரா ஆனது. 2-வது டெஸ்ட் நேற்று தொடங்கியது. இந்திய ஏ அணியின் தலைமைப் பயிற்சியாளராக செளராஷ்டிர முன்னாள் வீரர் ஷிதான்சு கொடாக்கும் டிராய் கூலி, வேகப்பந்துவீச்சுப் பயிற்சியாளராகவும் டி. திலீப்,ஃபீல்டிங் பயிற்சியாளராகவும் பணியாற்றுகிறார்கள்.

இந்நிலையில் 2-வது டெஸ்டில் டாஸ் வென்ற இந்திய ஏ அணி ஃபீல்டிங்கைத் தேர்வு செய்தது. வேகப்பந்து வீச்சாளர் முகேஷ் குமாரின் அபாரமான பந்துவீச்சில் வங்கதேச பேட்டர்கள் தடுமாறினார்கள். ஷஹாதத் ஹுசைன், ஜேக்கர் அலி மட்டும் நன்கு விளையாடி முறையே *80, 62* ரன்கள் எடுத்தார்கள். வங்கதேச ஏ அணி, *80.5* ஓவர்களில் *252* ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. பெங்காலைச் சேர்ந்த *29* வயது முகேஷ் குமார் *6* விக்கெட்டுகளையும் உமேஷ் யாதவ், ஜெயந்த் யாதவ் தலா *2* விக்கெட்டுகளையும் எடுத்தனர்.

# ரமேஷ்பவார் பணியை மாற்றியது பி.சி.சி.ஐ.

***2018*** முதல் இந்திய மகளிர் அணியின் பயிற்சியாளராகப் பணியாற்றி வந்தார் ரமேஷ் பவார். எனினும் நடுவில் இரண்டரை வருடங்களுக்கு மற்றொரு முன்னாள் வீரரான டபிள்யூ.வி. ராமன் பயிற்சியாளராகப் பணியாற்றினார். இதன் பிறகு *2021* மே மாதம் முதல் இந்திய மகளிர் அணியின் தலைமைப் பயிற்சியாளராக மீண்டும் பவார் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் இந்திய மகளிர் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த ரமேஷ் பவாரை, பெங்களூரில் உள்ள நேஷனல் கிரிக்கெட் அகாதெமிக்கு பணி மாற்றம் செய்துள்ளது பிசிசிஐ. நேஷனல் கிரிக்கெட் அகாதெமியில் சுழற்பந்துவீச்சுப் பயிற்சியாளராக ரமேஷ் பவார் பணியாற்றுவார் என அகாதெமியின் தலைவர் விவிஎஸ் லஷ்மன் கூறியுள்ளார். இந்திய அணிக்காக *2004* முதல் *2007* வரை *2* டெஸ்டுகள், *31* ஒருநாள் ஆட்டங்களில் ரமேஷ் பவார் விளையாடியுள்ளார்.

# மெதுவான பந்துவீச்சு: இந்திய அணிக்கு அபராதம்

வங்காளதேசத்துக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி பந்து வீச கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டது. குறிப்பிட்ட நேரத்தில் *4* ஓவர்கள் குறைவாக வீசி இருந்தனர். இதனால் இந்திய அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டது. போட்டியில் இருந்து பெறும் பணத்தில் *80* சதவீதம் அபராதம் விதித்து ஐ.சி.சி. நடுவர் ரஞ்சன் மடுகல்லே நடவடிக்கை எடுத்தார்.

# இந்தியா - பாக். போட்டி குறித்து முன்னாள் வீரர் அப்ரிடி கருத்து


இந்திய அணி ஆசியக் கோப்பைக்காக பாகிஸ்தானுக்குச் செல்லாது என்று அக்டோபரில் ஷா ஒரு வெடிகுண்டு வீசினார்.பிசிசிஐ உறுதியாக இருந்தால், உலகக் கோப்பைக்காக பாகிஸ்தான் இந்தியாவுக்குச் செல்லாது என்று பாகிஸ்தான் எதிர்த்தது. பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் ரமிஸ் ராஜா ஆசிய கோப்பை மற்றும் உலகக் கோப்பையில் இருந்து விலகுவதாக மிரட்டல் விடுத்தார்.

இரு வாரியங்களுக்கு இடையேயான சண்டைக்கு மத்தியில், பாகிஸ்தான் முன்னாள் கேப்டன் ஷாகித் அப்ரிடி ஆசிய கோப்பை மற்றும் உலகக் கோப்பை குறித்து அதிரடியான கருத்தை தெரிவித்துள்ளார். ஷாகித் அப்ரிடி கூறும் போது கிரிக்கெட் காரணமாக பாகிஸ்தான் மற்றும் இந்தியா இடையேயான உறவு எப்போதும் மேம்பட்டுள்ளது. இந்தியாவில் பாகிஸ்தான் கிரிக்கெட் விளையாடுவதை இந்தியர்கள் பார்க்க விரும்புகிறார்கள்'' என்று கூறினார்.

## உலகக்கோப்பை கால்பந்து போட்டி:
# காலிறுதி சுற்றுக்கு முன்னேறிய பிரேசில், குரோசியா அணிகள்

**தோகா, டிச. 07-**

உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் காலிறுதி சுற்றுக்கு பிரேசில், குரோசியா அணிகள் முன்னேறியுள்ளன.



கத்தாரில் உலக கோப்பை கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. நள்ளிரவு *12.30* மணிக்கு நடந்த நாக் அவுட் சுற்றில் பிரேசில், தென் கொரியா அணிகள் மோதின. ஆரம்பம் முதலே பிரேசில் வீரர்கள் அதிரடியாக ஆடினர். முதல் பாதியில் பிரேசில் வீரர்கள் கோல் மழை பொழிந்தனர். வினி ஜூனியர் *7*-வது நிமிடத்திலும், நெய்மர் *13*-வது நிமிடத்திலும், ரிச்சர்லிசன் *29*-வது நிமிடத்திலும், லூகாஸ் பகியூடா *39*வது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர். இதனால் முதல் பாதியில் பிரேசில் அணி *4-0* என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியின் *76*-வது நிமிடத்தில் தென் கொரியாவின் பெய்க் சியூங் ஒரு கோல் அடித்தார். இறுதியில், பிரேசில் அணி *4-1* என்ற கணக்கில் தென் கொரியாவை வீழ்த்தி காலிறுதிக்கு எளிதில் முன்னேறியது.

இரவு *8.30* மணிக்கு நடந்த நாக் அவுட் சுற்றில் ஜப்பான், குரோசியா அணிகள் மோதின. தொடக்கத்தில் ஜப்பான் வீரர்கள் சிறப்பாக ஆடினர். ஆட்டத்தின் *43*-வது நிமிடத்தில் ஜப்பான் அணியின் டெய்சன் மேடா ஒரு கோல் அடித்து தனது அணிக்கு முன்னிலை பெற்றுக் கொடுத்தார். இதனால் முதல் பாதியில் ஜப்பான் அணி *1-0* என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியின் *55*-வது நிமிடத்தில் குரோசியாவின் இவான் பெரிசிக் ஒரு கோல் அடித்தார். இதனால் *1-1* என சமனிலை வகித்தன.

கூடுதலாக *10* நிமிடங்கள் என *3* முறை அளிக்கப்பட்டன. அப்போதும் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. இதையடுத்து பெனால்டி ஷூட் அவுட் முறை கொண்டு வரப்பட்டது. இறுதியில், குரோசியா அணி *3-1* என்ற கணக்கில் ஜப்பானை போராடி வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

## பார்லி., குளிர்கால கூட்டத்தொடர்:
# முதல் நாளில் ஊடகங்களுடன் கலந்துரையாடுகிறார் பிரதமர்

**புதுடெல்லி, டிச. 07-**

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின் முதல் நாளில் ஊடகங்களுடன் பிரதமர் மோடி உரையாட கூடும் என மக்களவை செயலகம் தெரிவித்து உள்ளது.

பாராளுமன்றத்தில் குளிர்கால கூட்டத்தொடர் இன்று முதல் தொடங்கி வருகிற டிசம்பர் *29*-ந்தேதி வரை நடைபெறுகிறது. இந்த கூட்டத்தொடரை முன்னிட்டு அனைத்து கட்சி கூட்டத்திற்கு நேற்று அழைப்பு விடுத்திருந்தது. இதில் எதிர்க்கட்சிகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தது.

இதனை தொடர்ந்து, பாராளுமன்ற விவகார மந்திரி பிரகலாத் ஜோஷி கூறும்போது, விதிகள் மற்றும் அவை தலைவரின் அறிவுறுத்தலின்பேரில், அனைத்து விவகாரங்களை பற்றியும் ஆலோசனை நடத்தவும் மற்றும் விவாதம் மேற்கொள்ளவும் அரசு தயாராக உள்ளது என்று கூட்டத்தில் உறுதி கூறியுள்ளார்.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கவுள்ள நிலையில் முதல் நாளில் ஊடகங்களுடன் பிரதமர் மோடி உரையாட கூடும் என மக்களவை செயலகம் தெரிவித்து உள்ளது. கூட்டத்தொடரை சுமுக முறையில் நடத்தவும் மற்றும் பல மசோதாக்களை நிறைவேற்றும் நோக்குடன் அவை நடவடிக்கைகள் இருக்கும் என வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## 3 இடங்களில் வரும் 11-ம் தேதி
# ஆயுர்வேத நிறுவனங்களை திறந்து வைக்கிறார் பிரதமர்

**புதுடெல்லி, டிச. 07-**

கோவா, காஸியாபாத், டெல்லி ஆகிய *3* இடங்களில் வரும் *11*-ம் தேதி உள்ள ஆயுர்வேத நிறுவனங்களை பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கவுள்ளார்.

கோவா தலைநகர் பனாஜியில் வருகிற டிசம்பர் *11* ஆம் தேதி *9*-வது உலக ஆயுர்வேத காங்கிரஸ் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொள்ளவிருப்பதாக மத்திய ஆயுஷ் அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது. அது போல, கோவாவில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் *(AIIA)*, காஸியாபாத் தேசிய யுனானி மருத்துவ நிறுவனம் *(NIUM)* மற்றும் டெல்லியில் உள்ள தேசிய ஹோமியோபதி நிறுவனம் *(NIH)* ஆகிய *3* நிறுவனங்களை டிசம்பர் *11* ஆம் தேதி பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது. அன்றைய தினம் வடக்கு கோவாவில் உருவாகி வரும் மோபா சர்வ தேச விமான நிலையத்தின் முதல் பகுதியையும் பிரதமர் மோடி திறந்துவைக்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அத்திக்கடவு - அவிநாசி திட்டம் தொடங்கப்படுவது எப்போது..?
## அமைச்சர் துரைமுருகன் விளக்கம்

**வேலூர், டிச. 07-**

அத்திக்கடவு - அவினாசி திட்டத்தில் முதற்கட்ட பணிகள் முடிந்த பிறகு தான் அடுத்த கட்டப் பணிகள் துவங்கும் என்று அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

வேலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பிறகு செய்தியாளர்களிடம் அமைச்சர் துரைமுருகன் கூறியதாவது,

அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தை கடந்த ஆட்சியில் அவசரப்பட்டு துவக்கி விட்டு முடிக்காமல் சென்று விட்டனர். அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தை பொருத்தவரை கடந்த ஆட்சியாளர்கள் செய்ததைப் போலவே தற்போதும் செய்ய முடியாது. அந்த திட்டத்தை பொருத்தவரை, ஒரு ஏரியில் இருந்து மற்றொரு ஏரிக்கு தண்ணீர், குழாய் மூலம் தான் எடுத்துச் செல்ல வேண்டும்.

பல இடங்களில் மின்சாரத்தை பயன்படுத்தி தண்ணீர் எடுக்க வேண்டும். தண்ணீர் செல்லும் இடமெல்லாம் தனியார் நிலங்கள் உள்ளன. அவைகளை எடுக்க வேண்டும். ஆகவே இவ்வாறு தொடர் பணிகள் உள்ளன. இந்த பணிகளை அப்படியே விட்டு விட்டு அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை தொடங்க வேண்டும் என்று சொன்னால் இதையெல்லாம் செய்யாமல் ஏன் தொடங்கினீர்கள் என்ற கேள்வி வரும். ஆகவே செய்கிற பணிகளை முழுமையாக செய்த பிறகு அத்திக்கடவு - அவினாசி திட்டம் தொடங்கப்படும். இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறினார்

## தமிழகத்தில் இதுவரை
# 65.80 லட்சம் பேர் மின் இணைப்பு எண்ணுடன் ஆதாரை இணைத்தனர்

**சென்னை, டிச. 07-**

தமிழகத்தில் இதுவரை *65.80* லட்சம் பேர் மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் இணைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

சென்னை, ஆதார் எண்ணை மின் இணைப்பு எண்ணுடன் இணைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. குறுஞ்செய்தியை அனுப்பி வருகிறது. மின் நுகர்வோர் தங்களது பெயரில் ஒன்றுக்கும் மேற்பட்ட மின் இணைப்பு வைத்திருந்தாலும், ஒரே ஆதார் எண்ணை இணைக்கலாம் எனவும் மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தமிழகத்தில் இதுவரை *60.80* லட்சம் மின் இணைப்புகள், ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார். அமைச்சர் செந்தில்பாலாஜி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணியில், இன்று (டிச.*6*) *2,811* பிரிவு அலுவல சிறப்பு முகாம்கள் மூலம் *3.01* லட்சம் இணைப்புகளும், ஆன்லைனில் *2.02* லட்சம் இணைப்புகளும் ஆதாருடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இன்று வரை மொத்தம் *65.80* லட்சம் மின் இணைப்புகள் ஆதாருடன் இணைக்கப்பட்டிருக்கின்றன'' என்று பதிவிட்டுள்ளார்.

## ஆப்கனில் பயங்கரவாத செயல்பாடுகள்:
# பாதுகாப்பு ஆலோசகர்கள் மாநாட்டில் இந்தியா கவலை

**புதுடெல்லி, டிச. 07-**

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத இயக்கங்கள் பின்னிப் பிணைந்து இயங்குவது கவலை அளிக்கும் விஷயம் என தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் மத்திய ஆசிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்ற முதல் மாநாடு புதுடெல்லியில் நேற்று நடைபெற்றது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் தலைமை உரை நிகழ்த்திய அஜித் தோவல், ''ஆப்கானிஸ்தானின் இன்றைய நிலை நம் அனைவருக்குமே மிக முக்கியமான ஒன்று. ஆப்கன் விவகாரத்தில் நமக்கான முன்னுரிமைகள், முன்னோக்கிச் செல்வதற்கான வழிகள் ஆகியவை குறித்து இந்தியாவுக்கு கவலை இருக்கிறது. இது இந்தியாவுக்கு மட்டுமானது அல்ல. நம் அனைவருக்குமானது. குழப்பம் நிறைந்ததாகவும், எதிர்காலம் நிச்சயமற்றதாகவும் உள்ள நிலையில் நமது இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது. அமைதியான, பாதுகாப்பான, வளமான பகுதியாக மத்திய ஆசியா திகழ வேண்டும் என்பதே நம் அனைவரின் விருப்பம்.

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத இயக்கங்கள் பின்னிப் பிணைந்து காணப்படுவது கவலை அளிக்கிறது. நிதி உதவிகள்தான் பயங்கரவாதத்தின் உயிர்நாடி. அந்த வகையில் பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி உதவி கிடைப்பதை தடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது. பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி உதவி கிடைப்பதைத் தடுக்க வேண்டிய கடமை ஐ.நா உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் இருக்கிறது.

மத்திய ஆசிய நாடுகளுடனான தொடர்பு இந்தியாவுக்கு மிகவும் முக்கியம். இந்த பிராந்தியத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், முதலீடுகளை மேற்கொள்ளவும், தொடர்புகளை வலுப்படுத்தவும் இந்தியா தயாராக இருக்கிறது. இது நிகழ்வதற்கு வெளிப்படையான, பங்கேற்புடன் கூடிய முன் முயற்சிகளும் ஆலோசனைகளும் அவசியம்'' என்று அவர் கூறினார். மாநாட்டில் பேசிய கிர்கிஸ்தான் பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் மாரட் இமான்குலோவ், ''பயங்கரவாதத்தை ஒழிக்கவும், போதைப் பொருட்கள் கடத்தலை தடுக்கவும், ஆப்கானிஸ்தானிய பிரச்சினைக்குத் தீர்வு காணவும் வேண்டும் என்பது மத்திய ஆசிய நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இருக்கும் பொதுவான பிரச்சினை. இவ்விஷயத்தில் கிர்கிஸ்தான் முழு ஒத்துழைப்பு வழங்கும்'' என தெரிவித்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலினை, உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி, வருவாய்த்துறை மூலம் ஓய்வூதியம் பெற்று வரும் கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 4 லட்சத்து 39 ஆயிரத்து 315 நபர்களுக்கு தற்போது பெற்று வரும் ஓய்வூதியம் 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக வரும் ஜனவரி 1-ம் தேதி முதல் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தமைக்காக மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக இயங்கும் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர். அருகில் அமைச்சர் பி.கீதாஜீவன் உடனிருந்தார்.

### மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக இயங்கும்

# பல்வேறு சங்க பிரதிநிதிகள் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து நன்றி

சென்னை, டிச.07-

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக இயங்கும் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி கடந்த 3-ம் தேதி அன்று நடைபெற்ற விழாவில், வருவாய்த்துறை மூலம் ஓய்வூதியம் பெற்று வரும் கண்பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட 4 லட்சத்து 39 ஆயிரத்து 315 நபர்களுக்கு தற்போது பெற்று வரும் ஓய்வூதியம் 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாக வரும் ஜனவரி 1-ம் நாள் முதல் உயர்த்தி வழங்கப்படும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக தமிழக முதல்வரை நேற்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜான்சிராணி, டிசம்பர்-3 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் தீபக், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் சிம்மச்சந்திரன், தேசிய பார்வையற்றோர் இணையத்தின் திட்ட இயக்குநர் மனோகரன், தமிழ்நாடு உதவிக்கரம் - மாற்றுத் திறனாளர் நல்வாழ்வு சங்கத்தின் தலைவர் வரதகுட்டி உள்ளிட்ட சங்க பிரதிநிதிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, அமைச்சர் கீதா ஜீவன் உடனிருந்தார்.


● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலினை, சதுரங்க கிராண்ட் மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தா சந்தித்து, ஜனாதிபதி திரௌபதி முர்முவால் வழங்கப்பட்ட அர்ஜூனா விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார். அருகில் அவரது தாயார் நாகலட்சுமி, வேலம்மாள் கல்வி அறக்கட்டளை நிறுவன பேராளர் எம்.வி.எம்.வேல்மோகன், பள்ளி முதல்வர் அரவிந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

# அர்ஜூனா விருது பெற்ற பிரக்ஞானந்தா முதல்வர் ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து

சென்னை, டிச.07-

அர்ஜூனா விருது பெற்ற இளம் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா, சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

செஸ் விளையாட்டில் இந்தியாவுக்கு பெருமை சேர்த்து வரும் இளம் வீரரும், தமிழகத்தைச் சேர்ந்தவருமான பிரக்ஞானந்தா, அர்ஜூனா விருது பெற்றுள்ளார்.

நடப்பாண்டில் தமிழகத்தில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 2 வெண்கலம் (ஓபன், தனிநபர்) வென்று அசத்தியிருந்தார்.

நடப்பு உலக சாம்பியனான நார்வே வீரர் மேக்னஸ் கார்ல்சென்னை ஒரே ஆண்டில் 3 முறை வீழ்த்திய ஒரே வீரராக இருக்கிறார் பிரக்ஞானந்தா.

இந்நிலையில் ஜனாதிபதியிடம் அர்ஜூனா விருது பெற்றுள்ள கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா, நேற்று சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரக்ஞானந்தா, தமிழகத்தில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் சிறப்பாக இருந்ததாக வீரர்கள் பலரும் கூறினார்கள். பெருமையாக இருக்கிறது. அதனை ஏற்பாடு செய்து நடத்திய தமிழக அரசுக்கு நன்றி. உலகத்தின் நம்பர் ஒன் செஸ் வீரராக வர வேண்டும் என்பதே என் கனவு என்று கூறினார்.

# 11 நாட்கள் தொடர்ந்து எரியும் திருவண்ணாமலை மகாதீபம்

தி.மலை, டிச. 07-

உலகப் பிரசித்தி பெற்ற திருவண்ணாமலை கார்த்திகை மகா தீபத் திருவிழாவை முன்னிட்டு நேற்று அதிகாலை 4 மணிக்கு பரணி தீபம் ஏற்றப்பட்டது. மாலை 6 மணிக்கு மகா தீபம் ஏற்றப்பட்டது. இதை லட்சக்கணக்கான பக்தர்கள் கண்டு தரிசனம் செய்தனர். இந்த மகா தீபம் 11 நாட்கள் தொடர்ந்து எரியும்.

சிவனின் பஞ்சபூதத் தலங்களில் அக்னித்தலமான திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத் திருவிழா கடந்த நவம்பர் 27-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 7-ம் நாள் தேரோட்டம் மிக விமரிசையாக நடைபெற்றது. திருக்கார்த்திகை தீபத் திருவிழாவின் மிகச் சிறப்பு வாய்ந்தது பரணி தீபம். இது பல்லாயிரம் ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. இத்திருவிழாவின் உட்பொருளை நாம் அறிய வேண்டும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் எல்லா உயிர்களிடத்திலும் ஜீவனாக, ஒளியாக, திகழ்ந்து இருக்கின்ற அந்தப் பரம்பொருள் ஜோதியே எல்லாவற்றிற்கும் மூலம், ஆதாரம் என்று வழங்கப்படுகிறது. இந்த தீபஜோதியை பார்க்கும்போது எல்லாவற்றிற்கும் முதற்கடவுளாக இருக்கும் அந்த பரஞ்சோதி காலை 3.30 மணி அளவில் கருவறையில் கற்பூர தீபமேற்றி அனைத்து உலகத்தையும் காப்பது அந்த ஜோதிதான் என்பது போல சிவாச்சாரியார்கள் வேத பாராயணம் ஓத, வேத முழக்கத்தோடு அச்சுடரை அங்கே நெய் ஊற்றப்பட்டு தயாராக மண் மடக்கிலும் ஏற்றப்படுகிறது.

அதன் பிறகு முதலில் ஏற்றப்பட்ட மடக்குடன் வெளியே கொண்டு வரப்படுகிறது. ஒரு பரம்பொருள் ஐந்து மூர்த்திகளாக விளக்குவது தான் தீபத் திருநாளன்று காலையில் கருவறையில் ஏற்றப்படும் பரணி தீபம். பஞ்சமூர்த்திகளும், பஞ்ச சக்திகளுடன் இணைந்து செயல்படுவதனைக் காட்டுவதற்காக, அம்மன் கோயில் கருவறையில் ஐந்து அகல் விளக்குகள் ஏற்றப்படுகின்றன.

பிறகு இந்தச் சிவசக்தி மூர்த்தங்களிலிருந்து விரிவானதே எல்லா மூர்த்திகளும் என்பதனைக் காட்டுவதற்கு முதலில் விநாயகப் பெருமான் சன்னதி முதல் எல்லாச் சன்னதிகளிலும் தீபங்கள் ஏற்றப்படுகின்றன. இதுவே பரணி தீபத்தின் உட்பொருளாகும்.

லட்சக்கணக்கான மக்கள் கோயிலின் உள்வாளகத்தில் பரணி தீப தரிசனம் கண்டு அரோகரா, அரோகரா, அரோகரா என முழக்கமிட்டு இறைவடின வணங்கினர். இதைத் தொடர்ந்து, மாலை 6 மணிக்கு கோயில் தங்கக் கொடிமரம் எதிரே சிவபெருமான் அர்த்தநாரீஸ்வரராகக் காட்சியளிக்க, 2,668 அடி உயரமுள்ள திருவண்ணாமலை மலை மீது மகா தீபம் ஏற்றப்பட்டது.

இதே நேரத்தில், கோயில் கொடிமரம் எதிரே உள்ள பெரிய அகண்டத்திலும் தீபம் ஏற்றப்பட்டு, பக்தி இன்னிசைக் கச்சேரி, வாண வேடிக்கைகளும் நடைபெற்றன. திருவண்ணாமலை மலை மீது ஏற்றப்பட்ட இந்த மகா தீபம் 11 நாட்கள் தொடர்ந்து எரியும் என்பது கூடுதல் சிறப்பு.


● கார்த்திகை தீப திருவிழாவையொட்டி நேற்று மதுரை மீனாட்சி அம்மன் கோவில் முழுவதும் லட்ச தீபம் ஏற்றப்பட்டது. தீப விளக்கொளியில் பொற்றாமரை குளம் ஜொலிப்பதை படத்தில் காணலாம்.

### விலங்கு வதை அனைத்தையும் தடுக்க முடியாது:

# தமிழக கலாச்சாரத்தை பாதுகாக்கவே ஜல்லிக்கட்டு அனுமதி சட்டம்

## சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வாதம்

புதுடெல்லி, டிச.07-

சுப்ரீம் கோர்ட்டில் ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கில் விலங்கு வதை அனைத்தையும் தடுக்க முடியாது என்று தெரிவித்த தமிழக அரசு, தமிழக கலாச்சாரத்தை பாதுகாக்கவே 'ஜல்லிக்கட்டு' அனுமதி சட்டம் தமிழகத்தில் இயற்றப்பட்டுள்ளது என்றும் தமிழக அரசின் சார்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

தமிழக அரசின் ஜல்லிக்கட்டு அவசர சட்டம் மற்றும் ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு தடை கோரி, பீட்டா உள்ளிட்ட அமைப்புகள் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளன. இந்த வழக்கு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நேற்று நீதிபதி கே.எம்.ஜோசப் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு சார்பில் வழக்கறிஞர் ராகேஷ் திரிவேதி வாதிட்டார். விலங்குகளுக்கு தேவையற்ற வதை, வலியை தடுக்கும் அதே விலங்கு வதை தடுப்புச் சட்டத்தில், அவசியமான வலியும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொதி சுமக்கும் விலங்குகளை சுட்டிக் காட்டி வாதங்களை அவர் முன் வைத்தார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது., விலங்குகளுக்கான வதை என்ன என்பதை முடிவு செய்ய சட்டப்பேரவை, பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு, விலங்கு வதை தடுப்புச் சட்டத்தை இயற்றுவதற்கு சட்டப் பேரவைக்கு அதிகாரமுண்டு. விலங்குகளுக்கான வதை அனைத்தையும் முற்றிலும் தடுக்க முடியாது. தமிழக கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கவே ஜல்லிக்கட்டை அனுமதிக்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி கலாச்சாரம் உள்ளது. பிரியாணிக்காக விலங்குகளை பலியிடுவது கலாச்சாரமாகும். அசைவ பிரியர்களை கறி சாப்பிட கூடாது என விலங்கு வதை தடுப்புச் சட்டத்தின் மூலம் தடுக்க முடியுமா? தமிழக கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கவே ஜல்லிக்கட்டை அனுமதிக்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது ஜல்லிக்கட்டு. ஒரு கலாச்சாரத்தை காப்பது அந்த அரசுகளின் கடமை. கலாச்சாரத்தை காப்பது தமிழக அரசின் கடமை மட்டுமல்ல பொறுப்பும் கூட. கலாச்சார அடையாளம் என்பதால் பல வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஜல்லிக்கட்டை காண வருகின்றனர்.

இவ்வாறு அவர் வாதிட்டார்.

### கருத்துக்கணிப்பு முடிவுகள் உண்மையாகுமா?

# குஜராத், மத்தியபிரதேசத்தில் நாளை வாக்கு எண்ணிக்கை

புதுடெல்லி, டிச.07-

குஜராத், மத்தியபிரதேசத்தில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகவுள்ளன. குஜராத்தில் பா.ஜ.க. மீண்டும் ஆட்சியை கைப்பற்றும் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் தெரிவித்த நிலையில் இந்த 2 மாநிலங்களில் ஆட்சியை கைப்பற்றப் போவது யார் என்ற எதிர்ப்பார்ப்பு மேலோங்கியுள்ளது.

குஜராத் சட்டப்பேரவைக்கு 2-வது மற்றும் இறுதி கட்டமாக நடைபெற்ற தேர்தலில் 58.68% வாக்குகள் பதிவாகி உள்ளன. குஜராத், இமாச்சல பிரதேச சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை (8-ம் தேதி) எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இந்த 2 மாநிலங்களிலும், ஆளும் பா.ஜ.க. மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று கருத்துக்கணிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தில் உள்ள 182 சட்டப்பேரவைத் தொகுதிகளில் முதல் கட்டமாக 89 தொகுதிகளுக்கு கடந்த 1-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் 63.14% வாக்குகள் பதிவானது. இதையடுத்து, 2-வது மற்றும் இறுதி கட்டமாக, 14 மாவட்டங்களில் உள்ள 93 தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடைபெற்றது. இதில் பா.ஜ.க., காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட 60 கட்சிகளை சேர்ந்த 833 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். மொத்தம் 2.54 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

இந்த தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி அகமதாபாத்தில் உள்ள ஒரு வாக்குச் சாவடியில் வாக்களித்தார். பின்னர் தனது சகோதரர் வீட்டுக்குச் சென்று நலம் விசாரித்தார். மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, மாநில முதல்வர் பூபேந்திரபடேல் மற்றும் ஆம் ஆத்மி கட்சியின் முதல்வர் வேட்பாளர் இசுதான் காத்வி ஆகியோர் வாக்களித்தனர்.

இரண்டாம் கட்ட தேர்தலில் வாக்குப்பதிவு சுமுகமாக நடைபெற்றது. மாலையில் வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு வாக்கு இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு, வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டன. இறுதியாக 2-ம் கட்ட தேர்தலில் 58.68 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. குஜராத்தில் கடந்த முறை பா.ஜ.க., காங்கிரஸ் இடையே இரு முனைப்போட்டி நிலவியது. இந்த முறை பா.ஜ.க., காங்கிரஸ், ஆம் ஆத்மி என மும்முனை போட்டி நிலவுகிறது.

முன்னதாக, 68 உறுப்பினர்களை கொண்ட இமாச்சலபிரதேச சட்டப்பேரவைக்கு கடந்த நவம்பர் 12-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. இதையடுத்து, மின்னணு வாக்கு இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

அங்கு பா.ஜ.க. - காங்கிரஸ் இடையே நேரடிப் போட்டி நிலவுகிறது. குஜராத் மற்றும் இமாச்சல பிரதேச சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை (8-ம் தேதி) எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. அன்று மதியமே எந்தக்கட்சி ஆட்சியை பிடிக்கும் என்பது தெரிந்துவிடும்.

இதற்கிடையில், தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் வெளியாகியுள்ளன. குஜராத்தில் மொத்தம் 182 தொகுதிகள் உள்ளன. ஆட்சியமைக்க 92 இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்ற நிலையில் பா.ஜ.க. எளிதாக அறுதிப்பெரும்பான்மையை பெறும். கடந்த தேர்தலைவிட அதிக இடங்களில் வெற்றி பெறும். அக்கட்சிக்கு இது வரலாற்று வெற்றியாக அமையும் என்று கருத்துக்கணிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இமாச்சலபிரதேசத்தில் மொத்தம் 68 தொகுதிகள் உள்ளன. ஆட்சியமைக்க 35 இடங்களில் வெற்றி பெற வேண்டும். இங்கு ஆளும் பா.ஜ.க. -காங்கிரஸ் இடையே கடும் போட்டி இருக்கும். எனினும் காங்கிரஸைவிட அதிக இடங்களை கைப்பற்றி பாஜக மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று கருத்துக் கணிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


● விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் சின்மயா வித்யாலயா பள்ளியை சேர்ந்த மாணவர்கள் திருக்கார்த்திகையை முன்னிட்டு உடல் முழுவதும் தீபங்களை ஏற்றி யோகாசனம் செய்தனர்.